# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 23 புதன்கிழமை (07-03-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:101


மனம் திறந்து பேச இருதரப்பும் விருப்பம்

# நேரடிப் பேச்சுக்கான நேரம் நெருங்குகிறது

## தூதர் சொல்ஹெய்ம் தெரிவிப்பு



லண்டன்,மார்ச்7

**சமாதானப் பேச்சுத் தொடர்பாக அரச தரப்புக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நிலவிய வேறுபாடுகள் நீங்கி இரு தரப்பும் நேரடியாக மனம்விட்டுப் பேசும் நிலைக்கு நெருங்கி வந்துவிட்டதாக நோர்வே சமாதானத் தூதர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்திருக்கிறார்.**

கொழும்பில் அரச தரப்புடன் பேச்சு நடத்தி விட்டு லண்டன் திரும்பிய அவர் அங்கு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அரச தரப்பையும் புலிகளையும் நேரடியாகப் பேச்சுக்கு அழைப்பதற்காக இரு தரப்புடனும் பல தடவைகள் கலந்துரையாடியுள்ளேன். நேரடிப் பேச்சுக்கான நேரம் நெருங்கி விட்டது. ஒருவரோடு மற்றவர் நெருங்கி மனம் விட்டுப் பேசுவதற்கு அவர்கள் தயாராகிவிட்டனர். நெருங்கி வ்ந்தவிட்டனர் என்று தூதர்

(14ஆம் பக்கம் பார்க்க)

# நெதர்லாந்தில் நேரடிப் பேச்சு!

## புத்தாண்டு காலத்தில் நடக்கும்

கொழும்பு,மார்ச்7


**விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான முதற்கட்ட நேரடிப் பேச்சு நெதர்லாந்து நாட்டின் தலைநகர் அம்ஸ்ரடாமில் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு காலத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.**

**நோர்வே விசேட தூதரின் சமாதான முயற்சிகள் முன்னேற்றமான ஒரு கட்டத்தை எட்டி இருப்பதை அடுத்து நேரடிப் பேச்சுக்கான முன் ஆயத்தங்கள் தொடங்கிவிட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.**

அம்ஸ்ரடாமில் இடம்பெறவுள்ள முதற்கட்டப் பேச்சுக்கான முன் ஆயத்தங்களில் அந்நாட்டில் உள்ள இலங்கைத் தூதர் லயனல் பெர்னாண்டோ ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதற்கட்டப் பேச்சில் அரச தரப்புப் பிரதிநிதிகளாக அரசமைப்பு விவகார, கைத்தொழில்

(14ஆம் பக்கம் பார்க்க)



இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் நேற்று யாழ்.ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்புச் செய்த சுமார் 4 கோடி 20 லட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களைப் படத்தில் காணலாம்.

அனெற்றீஸியா எனப்படும் சத்திரசிகிச்சைக்கு உதவும் நவீன கருவி, 'அல்ரா சவுண்ட்' ஸ்கானர், இதயத் துடிப்பு அறியும் கருவி மற்றும் பற்சிகிச்சை உபகரணத் தொகுதி ஆகியனவே அமெரிக்க அரசினால் யாழ்.ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. (ஐ-3-5)



மருத்துவ உபகரணங்களைக் கையளிக்கும் வைபவத்தில் யாழ்.ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் செல்வி நவமலர் கனகரட்ணம் உரையாற்றுகிறார். அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் அருகில் அமர்ந்துள்ளார். வைபவத்தில் கலந்துகொண்ட ஆஸ்பத்திரி அதிகாரிகள் மற்றும் டாக்டர்களையும் படத்தில் காணலாம். (ஐ-5-6)

# ஆஸ்பத்திரியின் பாதுகாப்புக் குறித்து அமெரிக்கத் தூதருக்கு எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்7

யாழ்.போதனா வைத்தியசாலையின் பின் பகுதியில் இராணுவத்தினரின் முகாம்கள் அமைந்திருப்பதால் நோயாளர்கள் மற்றும் ஊழியர்கள், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமெரிக்க அரசினால் யாழ்போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட 4 கோடி 20 லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்களை அமெரிக்கத் தூதுவர் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் நேற்று நேரில் கையளித்தார்.

மருத்துவ உபகரணங்களைக் கையளிக்கும் வைபவம் யாழ். போதனா வைத்தியசாலையில் பணிப்பாளர் டாக்டர் செல்வி என்.கனகரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்ப்புலிகள் அமைப்பை கனடா தடைசெய்யாது!

## அந்நாட்டு அமைச்சு விளக்கம்

ஒட்டாவா,மார்ச்7

ஓர் இனம் சார்ந்த அமைப்பை கனடா ஒருபோதும் தடைசெய்யமாட்டாது. அவ்வாறு தடைசெய்து அந்த இனத்தின் ஜனநாயக உரிமையைப் பறித்துவிடக் கனடா விரும்பாது.

கனடா வெளிவிவகார அமைச்சு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்யுமாறு கனடாவில் இயங்கும் இலங்கை தேசிய ஐக்கிய சங்கம், கனடா சட்டமா அதிபர் மற்றும் பல அமைச்சர்களிடம் கடிதம் மூலம் கோரியிருந்தது.

இதற்கு பதில் அளிக்கும் வகையில் கனடாவின் வெளிவிவகார அமைச்சு செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளது.

பல்லின மக்களும் ஒன்றாக வாழக்கூடிய வகையில் கனடாவின் வெளிநாட்டுக் கொள்கை அமைந்துள்ளது. அதன்படி எந்த ஓர் இனத்தின் ஜனநாயக உரிமையையும் மறுக்கமுடியாது.

பயங்கரவாதச் செயல் குறித்து தகவல் கிடைத்தால் அந்தச் செயலுக்கு மட்டும் கண்டனத்தை வெளியிடலாம்.

ஆனால் இனம் சார்பாக இயங்கும் எந்த அமைப்பையும் பயங்கரவாத அமைப்பு என்று தடைசெய்ய முடியாது.

இந்த வகையில் கனடாவில் வாழும இலங்கைத் தமிழர்களும் ஜனநாயக உரிமைகளுடன் வாழ உரித்துடையவர்கள் - என்று அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை - அமெரிக்கா, பிரிட்டன ஆகிய நாடுகளைப் பின்பற்றி கனடா புலிகளைத் தடைசெய்யப்போவதில்லை என்று 'கனடியன் சிற்றிசன்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.(ஐ-3)

# அமெரிக்கத் தூதர் வில்ஸ் இன்று செம்மணிக்கு விஜயம்

யாழ்ப்பாணம்,மார்ச்7

யாழ்.வந்துள்ள அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் மற்றும் தூதரக அதிகாரிகள் இன்று செம்மணிப் பகுதிக்கு விஜயம்செய்யவுள்ளனர்.

1996 - 97ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் குடாநாட்டில் கைது செய்யப்பட்டபின் காணாமற்போன நூற்றுக் கணக்கானோர் கொன்று புதைக்கப்பட்டதாக நம்பப்படும் செம்மணியின் தரவைப் பகுதியில் மனிதப் புதைகுழிகள் தோண்டப்பட்ட இடங்களை அமெரிக்கத் தூதர் பார்வையிடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கத் தூதர் இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ்.பொது நூலகத்துக்கும் செல்லவுள்ளார். அங்கு இடம்பெறும் ஒரு வைபவத்தில் 'ஸ்ரீலங்கா பிரச்சினை குறித்த சில அவதானிப்புகள்' என்ற தலைப்பில் அவர் விசேட உரையாற்றுவார். பின்னர் நண்பகல் 12.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்துக்குச் சென்று துணைவேந்தரையும் மாணவரையும் சந்தித்து உரையாடுவார். தூதரும் அவரது குழுவினரும் இன்று மாலை இங்கிருந்து கொழும்பு திரும்புவர்.

## சிதம்பரக் கல்லூரி
வல்வெட்டித்துறை

### விஞ்ஞான கூடத் திறப்புவிழா
**அழைப்பு**

காலம் : நாளை (08-03-2001) வியாழக்கிழமை பகல் 12.30 மணி

தலைவர் : திரு.செ.யோகச்சந்திரன் (அதிபர்)

பிரதம விருந்தினர்: **திரு.சி.சிவராசா** அவர்கள்
(வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)

சிறப்பு விருந்தினர்: **திரு.த.இரவீந்திரராசா**
(தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டிடப்பகுதி - வடமராட்சி வலயம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

*சிதம்பரக் கல்லூரி*
*வல்வெட்டித்துறை.* (85014)

## உளங்கனிந்த உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாசாலையின் அதிபர்
**திரு.சி.மகேஸ்வரதாசன்** அவர்கள்
இலங்கை அதிபர் தரம் 2-1 இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு உளமாரப் பாராட்டி உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,
யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாசாலை. 85029

New Science College
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்
**2003 A/L**
திரிகோணகணிதம்
Sat.,Sun. 7-8 a.m.
இணைந்தகணிதம்
A.ரவீந்திரன் B.Sc.
**2002 A/L** (85041)
தொகையீடு
Sat.,Sun.1.00-2.00p.m.

ராஜா
யாழ்ப்பாணம் (C/15473)
டைட்டானிக்
(தமிழ் - ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.)

லஷ்சுமி இணுவில்
கடைசி வாரமாக
அஜித், சிம்ரன் நடித்த
உன்னைக்கொடு என்னைத் தருவேன்
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)
10.03.2001 முதல்
கண்ணன் வருவான்

நாகம்ஸ்
சுன்னாகம்
விஜயகாந்த், தேவயானி, வாசு, கபாலி நடித்த (84858)
வல்லரசு
(ரீல்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இரத்தினம் சண்முகம்

நீர்வேலி தெற்கு, செட்டி கிணற்றடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இரத்தினம் சண்முகம் அவர்கள் நேற்றுமுன்தினம் (05.03.2001) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி ஐயம்பிள்ளையின் மகளும், அமரர் சண்முகத்தின் அன்பு மனைவியும் சிவகுமாரன்(ஆசிரியர், ஹோலி ரோசறி தமிழ் வித்தியாலயம் - கொழும்பு), செல்வகுமாரன்(சிறி), சந்திரவதனா (லண்டன்), கிருஷ்ணகுமாரன்(ஜேர்மனி), சாந்தகுமாரன்(ஜேர்மனி), காலஞ்சென்ற பாலயோகினி, காலஞ்சென்ற இந்திரகுமாரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராஜமோகன் (லண்டன்), தனலட்சுமி (கொழும்பு), செல்வராணி, சந்திரிக்கா (ஜேர்மனி), யோகினி (ஜேர்மனி), ஆகியோரின் மாமியாரும், ஜெனனி, சுவிதா, ரஜீவன், சிந்து, சிந்துஜா, சிந்துஜன், கோகுலன், விருசினி, கரி, மதுமிரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 98/1,முத்துவெல்லாவத்தை, கொழும்பு-15 என்ற முகவரியில் எதிர்வரும் (11.03.2001) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*கந்தசாமி கோயிலடி,*
*நீர்வேலி.*
*தொலைபேசி: 074 614989*

தகவல்:
மகன ச.செல்வகுமாரன் (சிறி)
(85020)

## செல்வி ஜெனிக்கா மனோகரராசா

காங்கேசன்துறை (குருவீதி)யைப் பிறப்பிடமாகக் கொண்ட லண்டனில் வசிப்பவர்களான மனோகரராசா நேசமலர் தம்பதிகளின் ஏகபுத்திரி செல்வி ஜெனிக்கா (04.03.2001) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் (குருவீதி) காங்கேசன்துறையில் வசித்தவர்களான காலஞ்சென்ற சிதம்பரி - தங்கம்மா, நுணாவிலில் வசித்தவர்களான காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதிகளின் அன்புப் பேர்த்தியும், தம்பிராசா, தவமணி (கொழும்பு), நவரட்ணம், சொரணம்மா (கொழும்பு), மார்க்கண்டு, கமலாதேவி (லண்டன்), இராசரத்தினம், புஸ்பராணி (கோண்டாவில்), நாகலிங்கம், தங்கம்மா (கொழும்பு), காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் லீலா (நுணாவில்), தம்பிராசா, பூமணி (கொழும்பு), சின்னத்துரை, லோகாம்பிகை (சுவிஸ்), மோகன், மாலா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பெறாமகளும், காலஞ்சென்ற குலசேகரத்தின் ஆசை மருமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மிசன் பாடசாலை வீதி,*
*கோண்டாவில்.* (85022)

தகவல்:
இ.புஸ்பராணி (பெரியம்மா)

## பொன்னம்பலம் அமரசிங்கம்

(இளைப்பாறிய பிரதம இலிகிதர், வனபரிபாலனத் திணைக்களம்)

யாழ்ப்பாணம் நீராவியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் அமரசிங்கம் நேற்று (06.03.2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், செல்வி நகுலாம்பிகை அமரசிங்கம் (இளைப்பாறிய உபதபாலதிபர், நீராவியடி), காலஞ்சென்ற அமரேந்திரன் (சாம்பமூர்த்தி அன் கோ) ஆகியோரின் அருமைத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.03.2001) புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்வி நகுலாம்பிகை அமரசிங்கம்
(மகள்)

*120, அரசடி வீதி,*
*நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.*
(85021)

# நீங்காத நினைவலைகள்

### 3ஆம் மாத நினைவஞ்சலியும் · பிறந்தநாள் நினைவு கூரலும்



தோற்றம் 07 - 03 - 1915
மறைவு 18 - 12 - 2000

**அமரர் பொன்னையா கணபதிப்பிள்ளை**

(பிரத்தியேக ஆங்கில ஆசிரியரும், பிரித்தானிய ஆட்சியில் பிரதம லிகிதரும் திருமலைத் துறைமுகம்)

எங்கள் அன்பு ஐயாவே! நீங்கள்
எங்களை விட்டு நீங்கினாலும் உங்கள்
நினைவுகள் எங்களை விட்டகலாது.
உங்கள் பிறந்தநாளாகிய இன்று உங்களை
நினைவு கூருவதோடு உங்கள் ஆத்மா
சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

### நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 - 12 - 1924
மறைவு 26 - 08 - 1997

**திருமதி மகேஸ்வரி கணபதிப்பிள்ளை**

(ஈஸ்வரி)

ஐயிரண்டு திங்களாய்
அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே
பரிந்தெடுத்துச் - செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக்
கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்போம் இனி?

அம்மா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல காளி அம்பாளை வேண்டுகிறோம்.

**திருமதி சர்வேஸ்வரலலிதா கமலநாதன்**
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*

### 17ஆம் மாத நினைவஞ்சலி



தோற்றம் 22 - 12 - 1939
மறைவு 15 - 10 - 1999

**அமரர் ஆறுமுகம் கமலநாதன்**

(முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்விவலயம்)

சிங்கார நடையெங்கே? சிங்காரப் பேச்செங்கே?
மங்காத புகழ் எங்கே? மதிப்பான நிலையெங்கே?
இங்காரும் பெறவல்ல இனிதான வாழ்வெங்கே?
தங்காத இவ்வுலகில் தரியா நிலை யென்றெண்ணி
மங்காத சீரகத்தை மனதிலே கொண்டுநீர்
மாசுற்ற வுலகைவிட்டு மறைந்துதான் சென்றீரோ?
தாங்காது என்நெஞ்சு தணல்போலக் கொதிக்குதையா!
நீங்காவுன் நினைவலைகள் நித்தம் நிதம் வருகுதையா!

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
**அன்பு மனைவி, மருமகன், சந்திரன், மச்சான், மச்சாள்மார், சகலன்மார், பெறாமக்கள்.**

(85026)

# உதயன்

## மெல்லென வரும் உண்மை

கடந்த சில மாதங்களில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதால் விலைவாசிகள் அதிகரித்தன. அதனால் பொதுமக்கள் சிரமங்களை அனுபவிக்கின்றனர். மக்களின் சிரமங்களைக் குறைப்பதற்கான வழிவகைகள் வரவு—செலவுத்திட்ட உரையில் தெரிவிக்கப்படும்.

கடந்த வார இறுதியில் கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதின்மூன்றாவது தேசிய மாநாட்டில் பேசுகையில் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளை, அரசாங்க, தனியார் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் என்றும், அது இவ்வருட இறுதிக்குள் கிடைக்கும் என்றும் ஜனாதிபதி அறிவித்தார்.

சம்பள உயர்வு வரவு — செலவுத் திட்ட உரையில் அடக்கப்படமாட்டாது, பின்னரே கிடைக்கும் என்ற அறிவிப்பு, போர் நிறுத்தப்பட்டால் மட்டுமே அவை சாத்தியம் என்பதனையே ஜனாதிபதி பூடகமாக இவ்வாறு தெரிவித்திருக்கிறார் எனக் கொள்ள வைக்கிறது.

பொருளாதார நெருக்கடியும் விலைவாசிகளின் உயர்வும் இன்று நேற்று வந்தவை அல்ல. வடக்கு — கிழக்கு மாகாணத்தில் போர் தீவிரமாக்கப்பட்டதில் இருந்தே பொருளாதார நெருக்கடி இந்நாட்டைக் கவ்விக் கொண்டது.

ஆனால் போரின் மத்தியிலும் பொருளாதாரம் சீர்கெட்டுவிடவில்லை என்றே அரசு "போர்த்து மேவி" வருகிறது. பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க போன்றவர்கள் போரை முதன்மைப்படுத்தியும் முக்கியத்துவம் கொடுத்தும் பேசும்போது, இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பதற்கு கவர்ச்சி மொழி பேசும் போதும் பொருளாதாரம் சீர்கெட்டது குறித்தோ நெருக்கடி வந்தது குறித்தோ வெளிக்காட்டுவதில்லை.

அர்த்தமற்ற போர்; அழிவுகளைத் தந்துகொண்டிருக்கும் போர்; சமாதானத்துக்கான போர், என்று கூறியவாறே இராணுவ ஆளணியையும், நவீன ஆயுத தளபாடங்களையும் பெருக்குவதிலும் குவிப்பதிலும் தனது முழுக் கவனத்தையும் அரசு செலுத்தி வருகிறது.

பொருளாதார நெருக்கடி தோன்றுவதற்கு நாட்டின் நிதி வளம் கட்டுப்பாடில்லாமல், வரையறை இல்லாமல் போருக்காகச் செலவிடப்படுவதே பிரதான காரணம், ஏனைய உபகாரணங்களும் இல்லை என்று மறுப்பதற்கில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பொருளாதாரம் சம்பந்தமான பிரேரணை அரசு போருக்கு முகம் கொடுப்பதால் தற்காலிகபொருளாதாரநெருக்கடி உண்டாகி உள்ளதாகத் தெரிவிக்கிறது. அரசு இப்போது மெல்ல உண்மையைப் பேச முற்படுவது போலத் தெரிகிறது.

போர் தொடருமானால் இப்போதைய "தற்காலிகம்" நிரந்தரமாகிவிடும் என்பதனை அரசு உணருமாயின் மிகவும் நல்லது;

மாற்றும் அரசியல் தீர்வின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவும் நாட்டில் நிரந்தர சமாதானத்தை உண்டாக்குவதற்காகவும் கட்சி செயற்படுவதாகவும்—கட்சியின் சமாதானப் பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

பிரேரணையில் கூறப்பட்டுள்ளது போல, செயற்பட்டால் போரை முடிவுக்கு கொண்டு வருவது கடினமானதல்ல. சொல்வது போலச் செயற்படுமா ஆளுங்கட்சி?

## கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் மதிய போசன ஒன்றுகூடலும் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணிக்கு இடம்பெறவுள்ளன. (க-10)

## மட்டுவில், கல்வயலுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு

தென்மராட்சி, மார்ச் 7

மட்டுவில் மத்தி, கல்வயல் ஆகிய பகுதிகளில் தமது உடைமைகளைக் கைவிட்டு வந்த பொதுமக்கள் உடைமைகளை மீட்டுவருவதற்கு வாரத்தில் இருபது குடியிருப்பாளர் வீதம் இரு தடவைகள் இப்பகுதிக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

முதற் கட்டமாக நுணாவில் சந்தி தொடக்கம் மட்டுவில் மடத்தடிச் சந்தி வரைக்கும், மட்டுவில் சந்தி தொடக்கம் பெருங்குளம் சந்தி வரையான பகுதிகளில் வீதி அருகில் உள்ள வீடுகளின் சொந்தக்காரர்கள் அழைத்துச் செல்லப்படுவார்கள்.

அடுத்த அடுத்த கட்டங்களில் அனைத்து வீடுளையும் பார்வையிட அழைத்துச் செல்லப்படும் என்றும் கிராம அலுவலர் க. வாமதேவன் தெரிவித்தார்.

தமது வீடுகளைப் பார்வையிடவுள்ள மக்கள் கிராம அலுவலரிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 7

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி, இன்று புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு வித்தியாலய அதிபர் ஆ. குமரேசமூர்த்தி தலைமையில், காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி கோயில் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் தென்மேற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் க. இரத்தின் சிங்கம் கலந்து கொள்வார். (க-றீ)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 7

சுழிபுரம், காட்டுப்புலம் அ. த. க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் என். தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்லையா கலந்து கொள்வார். (க-15)

**உதயவாக்கு**

தகுதிக்கு மேல் செலவு செய்பவன் தன் உயிரைக் குடித்துக் கொள்ளக் கயிறு திரிக்கிறான்.

## நாளை

மாசி 24

**வியாழக்கிழமை**

திதி: சதுர்த்தசி

பின் இரவு 4.47 வரை.

நட்சத்திரம்: மகம்

பின் இரவு 3-10 வரை.

மாசி மக நன்னாள்

ஜபநேரம்: 7.55 — 9.25

ராகுகாலம்: 01.55— 3.25

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# விவசாயம் மற்றும் அபிவிருத்திக்கு அடிப்படை வசதிகள் இங்கு இல்லை!

## அமெரிக்கத் தூதரிடம் அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ். குடாநாட்டில் விவசாயம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கான அடிப்படை வசதிகள் கூட இல்லை என்று யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் நேற்று யாழ்.செயலகத்துக்கு விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அஸ்லி வில்ஸிடம் தெரிவித்தார்.

இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அமெரிக்க தூதுவர் தலைமையிலான குழுவினர் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு யாழ் செயலகத்துக்கு விஜயம் செய்து அரச திணைக்களத் தலைவர்களைச் சந்தித்தனர்.

இச்சந்திப்பின் போது யாழ். குடாநாட்டு மக்களின் பிரச்சினைகளை தூதர் கேட்டறிந்து கொண்டார்.

இச்சந்திப்பின் போது யாழ். அரசாங்க அதிபர் மேலும் கூறியதாவது:-

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும்விவசாயப் பொருள்களை சந்தைப்படுத்த முடியாத நிலையில் விவசாயிகள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

போக்குவரத்து வசதியின்மை காரணமாகவே இந்தப் பொருள்களைச் சந்தைப்படுத்த முடியாத நிலையேற்பட்டுள்ளது.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் கண்டி வீதி ஊடான தரைப் போக்குவரத்து சேவைகள் இடம்பெற்ற காலத்தில் விவசாயிகள் பெரும் நன்மை அடைந்தனர்.

யாழ். குடாநாட்டில் 144 நலன்புரி முகாம்களில் 17 ஆயிரம் குடும்பங்கள் அகதிகளாக வாழ்கின்றன. மாவட்டத்தின் சனத்தொகை தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

சீரான மின்சாரத்தைப் பெறுவதில் குடாநாட்டு மக்கள்பெரும் கிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

1996ஆம் ஆண்டுக்கு பின் யாழ். பாவனையாளர்களுக்கு 17 மெகாவாட் மின்சாரம் தேவையாக இருந்த போதும் 14 மெகாவாட் மின்சாரமே தற்போது வழங்கப்படுகிறது.

புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளை இயக்குவதற்குத் தேவையான மின்சாரத்தை பெற முடியாத நிலையே உள்ளது.

கணனிக் கல்வி வாய்ப்பு கடந்த சில வருடங்களாகவே எமது மாணவர்களுக்கு கிடைத்துள்ளது.

கணனிக் கல்வியை மேம்படுத்த நவீன பயிற்சி முறைகளும் கணனி பற்றிய ஆங்கில நூல்களும் தேவைப்படுகின்றன.

யுத்தத்தினால் யாழ். குடாநாட்டின் முக்கிய வளமான பனை, தென்னை ஆகிய பயன்தரும் மரங்கள் அழிந்து போயுள்ளன.

இந்த மரங்கள் வீணே தறிக்கப்பட்டு காப்பரண்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மனித உரிமைகள் பற்றி உலகெங்கும் இன்று முக்கியமாகப் பேசப்பட்டு வருகின்றது. ஆனால் இங்குள்ளவர்களுக்கு மனித உரிமைகள் என்றால் என்னவென்று தெரியாமல் இருக்கிறது.

இரவு எட்டு மணிக்குப் பின் பொதுமக்கள் எவரும் வீட்டுக்கு வெளியே வரமுடியாத சூழ்நிலையில் பீதியுடன் வாழ்கிறார்கள்.

செம்மணி போன்ற மனிதப் புதைகுழிகள் யாழ். குடா மக்களிடம் மேலும் அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளன.

இவ்வாறு அரச அதிபர் தனது உரையில் தெரிவித்தார்.

### தூதரின் உரை

அங்கு உரையாற்றிய அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் கூறியதாவது:-

கடந்த 170 ஆண்டுகளாக அமெரிக்கா யாழ்ப்பாணத்துடன் தொடர்புகளைக் கொண்டுள்ளது. அமெரிக்க மிசன்கள் இங்கு ஆரம்பிக்கப்பட்டுக் கல்வி வளர்ச்சிக்கு உதவின. இங்குள்ள மக்களின் கல்வி வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளைத் தற்போதும் வழங்கிவருகின்றோம்.

இங்குள்ள மக்கள் சமாதானம் மீது கொண்டுள்ள அக்கறையை நம்பிக்கையை இந்த விஜயத்தின்போது எம்மால் உணர முடிந்தது. இந்தப் பிரதேச மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண எங்களால் செய்யக்கூடிய உதவிகள் குறித்து உடனடியாக வாக்குறுதி எதனையும் அளிக்க முடியாது. வழங்கக்கூடிய உதவிகள் குறித்து பின்னர் அறிவிப்போம் — என்றார். [ஐ-3-5]

## காய்ச்சலால் யுவதி மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் கடந்த 2 ஆம் திகதி யாழ்.போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட யுவதி ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

உச்சியோடை, மானிப்பாய் வடக்கைச் சேர்ந்த தம்பிராசா இராசேஸ்வரி என்ற யுவதியே உயிரிழந்தவராவார். மரண விசாரணைகளின் பின்னர் இவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ—6—90)

## இலங்கை வங்கிக் கிளைகளில் நகை அடகுவைக்கும் பணி இன்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம் மார்ச் 7

யாழ்.மாவட்டத்தில் முதல் முறையாக இலங்கை வங்கிக் கிளைகளில் நகை அடகு வைக்கும் பணிகள் இன்று புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை வங்கி பிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார்.

'ரண் சுரக்கும் நய' என்ற பெயரில் தங்க நகைகளை அடகு வைப்பதன் மூலம் அவசர தேவைகளுக்காகப் பணம் வழங்கும் துரித கடன் திட்டம் இலங்கை வங்கியின் யாழ். மேற்தரக் கிளையில் இன்று காலை 10 மணிக்கு வடபிராந்திய உதவிப்பொது முகாமையாளர் திருமதி ஐ. பி. இரத்தினதுரையினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது. யாழ். மேற்தரக்கிளையில் மட்டுமே ஆரம்பிக்கப்படவுள்ள இத்திட்டம் பின்னர் ஏனைய கிளைகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் ரூபா இரண்டு லட்சம் வரை கடனாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

நகைகளை அடகு வைக்கும் போதே 30 ரூபா 'ரன் சுரக்கும் சேமிப்புக் கணக்கு' என்ற பெயரில் விசேட கணக்கொன்றையும் ஆரம்பிக்க முடியும். இதில் வசதிப்படி மாத வைப்புக்களை செய்வதன் மூலம் மீளளிப்புக்குத் தேவையான பணத்தை சேகரிக்கவும் வாய்ப்பு அளிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-8)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, மார்ச் 7

யாழ்ப்பாணம் கல்விவலய கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளிடையேயான வலைப்பந்தாட்டப் போட்டியில் 17 வயதுப்பிரிவினருக்கான கால் இறுதிப் போட்டியும் 19 வயதினருக்கான அரையிறுதிப் போட்டியும் இன்று புதன்கிழமை பிற்பகல் 1—30 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (ஐ-86)

★ ★ ★

யாழ்ப்பாணம் கல்விவலய நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளிடையேயான வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை காலை 8-00 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

### 15 வயதுப்பிரிவு

★ அரியாலை சிறிபார்வதி வித்தியாலயம் எதிர் யாழ். இந்து மகளிர் கல்லூரி.

★ கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

### 17 வயதுப்பிரிவு

★ யாழ் இந்து மகளிர் கல்லூரி எதிர் அரியாலை சிறிபார்வதி வித்தியாலயம்

★ செங்குந்தா இந்துக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

★ கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் எதிர் பெரியபுலம் மகாவித்தியாலயம்.

★ அரியாலை கனகரட்னம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம். (ஐ-86)

★ ★ ★

உரும்பிராய் சென் மைக்கல் விளையாட்டுக் கழகம் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு இடம் பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம்வருமாறு:

★ குருநகர் சென். றோக்ஸ் வி. க. எதிர் நாவாந்துறை கலைவாணி வி. க.

★ நாவாந்துறை சென். மேரிஸ் வி. க. எதிர் அச்செழு வளர்மதி வி. க. (ஐ-3

## விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 7

மீசாலையிலுள்ள தமது வீடு பார்க்கச் சென்றவேளை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட இரு இளைஞர்கள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

மீசாலை வடக்கைச் சேர்ந்த வைரமுத்து புஷ்பகாந்தன், கல்வயலைச் சேர்ந்த குமாரசாமி குகதாஸன் ஆகிய இருவருமே விடுவிக்கப்பட்டவர்களாவர். (ஐ-15)

37 ஆவது அகில இலங்கை வேதாகம
வினாவிடைப் போட்டி 2001

பிராந்தியப் போட்டிகள் 19-05-2001
அன்று நடைபெறவுள்ளன.
12-16 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள்
அனைவரும் பங்குபற்றலாம்.
பங்குபற்ற விரும்புவோர் விண்ணப்பப்படிவங்களை
யாழ். வை. எம்.சி ஏ. காரியாலயத்தில்
பெற்றுக்கொள்ளவும்.
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு திகதி
25-03-2001
★ சகல கிறிஸ்தவ சபைகளையும் சார்ந்த பிள்ளைகள்
அனைவரும் இதில் பங்குபற்றலாம்.
செயலாளர்,
வை. எம். சி. ஏ. யாழ்ப்பாணம்.
(85000)


# ஈழக் கலைஞருக்கு சர்வதேச ரீதியில்

# திருமறைகலாமன்றம் மூலமே பெருமை

## நாடகப் பயிலக அங்குரார்ப்பண நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம், மார்ச் 7

ஈழத் தமிழர்களுக்கு உலக ரீதியில் பெரும் கலைஞர்கள் என்ற பெருமையை ஏற்படுத்திக் கொடுத்ததில் திருமறைக் கலாமன்றத்திற்கு பெரும் பங்கு உண்டு. இந்தப் பயிலகத்தில் பயின்றவர்கள் தான் சர்வதேச நாடுகளுக்குச் சென்று நாடகங்களை மேடையேற்றி விட்டு வந்திருக்கிறார்கள்.

இவ்வாறு யாழ். திருமறைக் கலாமன்றத்தில் கடந்த வாரம் நடைபெற்ற நாடகப் பயிலக வகுப்பு அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு [சிறப்புரையாற்றிய முது பெரும் நாடகக் கலைஞர் இரா. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஒரு நாடகக் கலைஞன் எத்தனை துன்பங்களைச் சந்தித்தாலும், இடர்களை எதிர்கொண்டாலும் அவனது இதயத்தில் சாதி, சமய, இனத் துவேசங்கள் ஏற்படுவதில்லை. மாறாக அன்பும் கருணையுமே ஊற்றெடுக்கின்றன; ஊற்றெடுக்க வேண்டும்.

திருமறைக் கலாமன்றத்தில் கலைகளைப் பயிலும் ஒவ்வொருவரது இதயத்திலும் இந்தக் கருத்தே நிறைந்திருக்கின்றது. இங்கு எவருமே சாதி பார்ப்பதில்லை. மதம் பார்ப்பதில்லை. நான் ஓர் இந்து மதத்தவனாக இருந்தும் இந்த இடத்தில் நிற்பதே இதற்குச் சான்றாகும்.

இந்தியாவில் கலையை வளர்ப்பதற்குத் தனியார் நிறுவனங்கள் பல இயங்குகின்றன. ஆனால் இங்கு தனியார் நிறுவனமாகத் திருமறைக்கலாமன்றம் மட்டுமே இயங்குகின்றது. இதனை ஒவ்வொரு கலைஞனும் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

திருமறைக் கலாமன்றத்தால் வருடா வருடம் மேடையேற்றப்படும் ''இயேசுவின் திருப்பாடுகள்' நாடகப்பயிற்சியை ஆரம்பித்து ஆசியுரை வழங்கிய யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை செல்வராஜா அடிகள் தமது உரையில்:-

கிறிஸ்தவர்களின் பக்தி முயற்சியாக கருதப்படும் இந்த நாடகம், ஒவ்வொரு மனிதனதும் ஆன்மீக வழிபாட்டுக்கு முக்கிய பங்காற்றுகின்றது. இதில் நடிக்கும் ஒவ்வொரு கலைஞனும் இதனை மனதில் இருத்தி பக்தி சிரத்தையுடன் நடிக்க வேண்டும்.

நாட்டுப்பிரச்சினைகளால் அல்லற்படும் எமது மக்களின் மனதிற்கு ஆறுதலை, சாந்தியை ஏற்படுத்தி அவர்களின் கவலைகளைக் குறைக்கக் கூடிய இந்த நாடகமானது காலத்தின் தேவைப்பாடாகும்.

ஒவ்வொரு வருடமும் திருமறைக் கலாமன்ற கலைஞர்களால் மேடையேற்றப்படும் இந்த ''இயேசுவின் திருப்பாடுகள் காட்சி'' சிறப்பாக நடைபெற இறை ஆசியை வேண்டுகிறேன் என்றார்.

(க-6)

## பௌர்ணமி திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 7

சுன்னாகம், மயிலணி ஸ்ரீ சர்வமங்கள இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் பௌர்ணமித் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (க-10)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் ஸ்தாபகரும்
புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியத்தின் தலைவரும்,
சமூக முன்னோடித் தலைவருமான
மாவையூர் - திரு இ மு. நாகலிங்கம்
அவர்கள் அண்மையில் அகில இலங்கைச்
சமாதான நீதிபதியாகக் கொழும்பில் சத்தியப்பிரமாணம்
செய்து கொண்டார்.
அத்துடன் சமூக முன்னோடிகளில் ஒருவரும்,
புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியத்தின்
செயலாளருமான
அராலியூர் - திரு. ச. ஆனந்தன்
அவர்களும், சமூக முன்னேற்றக் கழகங்களின்
சமாசப் பொதுச்சபை உறுப்பினரான
நல்லூர் - திரு. மு. செல்லத்தம்பி
அவர்களும் அண்மையில் யாழ். மாவட்ட
சமாதான நீதிவான்களாகச் சத்தியப்பிரமாணம்
செய்து கொண்டனர்.
இம்மூவரின் நியமனம் குறித்தும் நாம் அனைவரும்
பெருமையடைகிறோம்.
இவர்களின் சமூகப்பணி மேலும் தொடர,
இம் மூவரும் பல்லாண்டு காலம் வாழ இறைவனை
வேண்டி இவர்களைப் பாராட்டி வாழ்த்தி நிற்கும் —
விவேகானந்தா சனசமூக நிலையமும்,
படிப்பகமும்.
மிசன்பாடசாலை வீதி,
கோண்டாவில்.
(85023)



கண்ணீர் அஞ்சலி

கரம்பொன் சிறிய புஸ்பமகளிர் மகா வித்தியாலயத்தில்
க. பொ. த. உயர் தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவி
செல்வி கிருபாலினி சிவனடியான்
05-03-2001 அன்று மரணம் அடைந்ததையிட்டு
ஆறாத்துயரில் இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
சிறிய புஸ்ப மகளிர்
மகா வித்தியாலயம்,
கரம்பொன்.
(85030)



நாலாம் ஆண்டு நினைவஞ்சலி





யா/தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், அத்தியடியை
வசிப்பிடமாகவும் கொண்டவர்களான
திருமதி
அன்னமலர் கந்தசாமி
அன்னை மடியில்
25-07-1947
செல்வன்
கந்தசாமி கஜன்
அன்னை மடியில்
02-04-1981
இறைவன் அடியில் 19-02-1997
திதி: 07--03--2001
''இல்லத்திற்கரசியாய் இகம் போற்ற வாழ்ந்தவளே
குலத்தின் பெயர் விளங்க குலக்கொழுந்தாய் உதித்தவனே
இலங்குகின்ற குடும்பத்தில் இடிவிழுந்த செய்தியாய்
கலங்கி இங்கு கதறிட கடலினுள் சங்கமமானீர்''
அன்பிற்கினியவளே! ஆசைக் கொரு மகனே!
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறிடுமோ எம் துயரம்?
உங்களை என்றும் மறவாத
கந்தசாமி: கணவன் - தந்தை,
அம்மம்மா,
சண்முகராசா யோகா,
சிவபாலன்.
48. அத்தியடிப் புதுவீதி,
யாழ்ப்பாணம்.
(84886)



அளவெட்டி சைவ வாலிப சங்கம்
வருடாந்தப் பொதுக்கூட்டமும்
பரிசளிப்பு விழாவும்
மூத்த சேவையாளர்களைக்
கௌரவித்தலும்

காலம்: 09-03-2001 வெள்ளிக்கிழமை
காலை 9.00 மணி
இடம்: அளவெட்டி அருணோதயக்
கல்லூரி மண்டபம்
தலைவர்: திரு. செ. வேலாயுதபிள்ளை
(அ சை.வா. சங்கத் தலைவர்)
பிரதம விருந்தினர்
உயர்திரு. நா. வேதநாயகன் அவர்கள்
(பிரதேச செயலர், சண்டிலிப்பாய்)
சிறப்பு விருந்தினர்கள்
உயர்திரு. மு. திருநாவுக்கரசு
(ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி)
சைவப்புலவர் திரு. சு. செல்வத்துரை
(ஓய்வு பெற்ற அதிபர்)
திரு. கி. மகேந்திரராசா
(அதிபர், அருணோதயக் கல்லூரி)
சங்கத்தின் மூத்த சேவையாளர்களைக் கௌரவித்து
ஆசியுரை வழங்கல்
பிரம்மஸ்ரீ இ. சோமசுந்தரேஸ்வரக்குருக்கள்
(பிரதம சிவாச்சாரியார்,
அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்)
பரிசில் பெற்ற மாணவர்களின் பண்ணிசை
நிகழ்வும், பரிசளிப்பும் இடம்பெறும்.
அன்பர்கள் அனைவரையும் விழாவில் கலந்து
கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
- நிர்வாகக்குழு,
அ சை.வா.சங்கம்
விளம்பர அன்பளிப்பு:
VINAYAGAR STORES
விநாயகர் களஞ்சியம்
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி. [85027]

# சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க அரசுக்கு உலக திருச்சபைமன்று அழுத்தம்

## ஜெனிவாவில் இருந்து வண.கென்னற்றெயிசர் வருகிறார்

கொழும்பு,மார்ச்7

சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பிக்குமாறு வலியுறுத்தி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சியில், உலகத் திருச்சபை மன்றின் செயலாளர் ஈடுபட்டுள்ளார். இந்த முயற்சியின் ஓர் அங்கமாக இவர் அடுத்த வாரம் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்புக்கு வரவுள்ளார்.

உலகத்திருச்சபை மன்று ஜெனிவாவில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கி வருகின்றது. இதன் செயலாளர் வணக்கத்திற்குரிய கலாநிதி கென்னற்றெயிசர் என்பவரே இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

கொழும்பில் தங்கியிருக்கும் சமயம் அரசியல் தலைவர்களையும் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும், மதத்தலைவர்களையும் சந்தித்து இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்துத் கலந்துரையாடல்களை நடத்துவார்.

அதைத் தொடர்ந்து கலாநிதி கென்னற்றெயிசர் எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஒரு நாள் மட்டுமே தங்கியிருக்கும் இவர் யுத்த அனர்த்தங்கள் குறித்தும், சமாதான சூழலை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும், அரச அதிகாரிகளுடனும் யாழ்ப்பாணத்தில் செயற்படும் மனிதநேய அமைப்புக்களின பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடுவார் என்றும் -

குடாநாட்டின் சில பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை நேரடியாக அவதானிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-99)



அளவெட்டி வடக்கு அறிவொளி சனசமூக நிலையத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாவும் புதிய கட்டடத் திறப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றன.

வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி ஸ்ரீபாஸ்கரன் கட்டடத்தைத் திறந்து வைப்பதை படத்தில் காணலாம். (ம-48)

# பொன்னாலைக் குளத்தை விரைவில் புனரமைக்க நடவடிக்கை

மூளாய்,மார்ச்7

உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் வலிகாமம் மேற்கில் உள்ள பொன்னாலைக் குளத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் உள்ள பெரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாகிய இப்பொன்னாலைக் குளம் நீண்ட காலமாகத் திருத்தி அமைக்கப்படாமல் உள்ளது. குளத்துடன் தொடர்புடைய நீர்ப்பாசன வாய்க்கால்களும் சிதைவடைந்து காணப்படுகின்றன.

இந்த ஆண்டு மேற்படி நிறுவனத்தின் மூலமாக இக்குளம் புனரமைப்புச் செய்வதற்கான ஆரம்ப மதிப்பீட்டுப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விரைவில் அடுத்த கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (க-99)

# 1996 இல் காணாமற்போன 350 பேரின் பெயர்ப் பட்டியல் யாழ். வந்தது

## முறைப்பாட்டாளர் ஆவணங்களைப் பதிவுசெய்ய கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்7

1996ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் காணாமற் போனவர்களில் 350 பேரின் பெயர், விவரங்கள் அடங்கிய பட்டியல் கொழும்பில் இருந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.கிளை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள பொலீஸ் தலைமையகத்தினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட இப்பட்டியல் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளது.

இந்தப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள காணாமற் போனவர்களின் குடும்பங்களுடன் தொடர்பு கொள்ள முடியாமல்இருப்பதாகவும் -

காணாமற் போனவர்கள் தொடர்பாக முறைப்பாடு செய்தவர்கள் மற்றும் சாட்சியாளர்களை அருகிலுள்ள பொலீஸ் நிலையங்களுக்குச் சென்று காணாமற் போனதற்கான ஆவணங்களைப் பதிவு செய்யுமாறும் பொலீஸ தலைமையகத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

காணாமற் போனமை தொடர்பான சரியான சாட்சிகள், ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டால் அவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கே இந்த நடவடிக்கை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-5)

### தென்மராட்சிப் பிரதேசத்தில்

# மீனவருக்கு ஏற்பட்ட இழப்புகளை கண்டறிய குழு நியமனம்

யாழ்ப்பாணம்,மார்ச்7

தென்மராட்சிப் பிரதேச கடற்றொழிலாளர்கள் மீளக் குடியமர்த்தப்படும்போது அவர்களின் தொழில் வாய்ப்புகள் மற்றும் குடியிருப்பு வசதிகள், அத்தியாவசிய தேவைகள், புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னேற்பாடாக திட்டமிடற் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவினர் முதற் கட்டமாக தென்மராட்சிப்பகுதி கடற்றொழிலாளர் சங்கங்களுக்கூடாக கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்ட தொழில் இழப்புக்கள் மற்றும் உடைமைகளின் அழிவுகள் தொடர்பான புள்ளி விவரங்களைத் திரட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மீளக் குடியமரும் மக்களுக்கான தற்காலிக குடியிருப்புகளை அமைத்துக் கொடுப்பது தொடர்பாகவும் -

அவர்களுக்கான அத்தியாவசியத் தேவைகளைத் தீர்த்து வைப்பது தொடர்பாகவும் இக்குழு ஆராயும்.

ஆறுபேரைக் கொண்ட இந்தக் குழுவின் இணைப்பாளராக வி.சாம்பசிவம் நியமிக்கப்பட்டுள்ளார்.(க-6-5-ரி)



பிரம்மஸ்ரீ ந.சபாரட்ணக் குருக்களின் ஷஷ்டியப்த பூர்த்தி விழா அண்மையில் இடம்பெற்றது. விழாவில் குருக்களுக்கு 'சிவாச்சாரிய ரத்னா' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

விழா நாயகரை வாழ்த்தி பிரதிஷ்டா வித்வத் ஜோதி அரியாலையூர் சிவஸ்ரீ இ.சுப்பிரமணியக் குருக்கள் உரையாற்றுவதை படத்தில் காணலாம். நல்லை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் உடன் இருக்கிறார். (ம-69)

# இலங்கையின் சமாதான முயற்சிக்கு முழுப் பங்களிப்பை இந்தியா வழங்கும்

## யாழ்.வந்த தூதுவர் காந்தி கூட்டணியினரிடம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்7

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நோர்வே நாட்டின அனுசரணையுடன் இலங்கை அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு இந்தியா தனது முழுப் பங்களிப்பையும் வழங்கும் என்று கடந்த ஞாயிற்றுக்கிழமை தம்மைச் சந்தித்த தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களிடம் இலங்கைக்கான இந்தியத் தூதர் கோபாலகிருஷ்ணகாந்தி தெரிவித்தார்.

இரண்டுநாள் விஜயத்தை மேற்கொண்டு கடந்த சனியன்று யாழ்ப்பாணம் வந்த இந்தியத் தூதரை கூட்டணிப் பிரமுகர்கள் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வொன்று காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்றும் தூதுவர் அவர்களிடம் தெளிவுபடுத்தினார்.

இரண்டு தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கிநின்ற இவர் யாழ். குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் மற்றும் அரசியல் நிலைப்பாடுகள் பற்றியும் அவர்களிடம் தமிழில் உரையாடி விவரங்களைப் பெற்றுக்கொண்டார்.

யாழ்.அரசாங்க அதிபரைச் சந்தித்த தூதுவர் காந்தி, குடாநாட்டு மக்களின் உணவு மற்றும் நிவாரண விநியோகங்கள் பற்றியும் கேட்டறிந்து கொண்டார்.

சனிக்கிழமை பருத்தித்துறையில உள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்துக்குச் சென்று ஸ்ரீ இராமகிருஷ்ணரின் ஜெயந்தி தின வைபவத்தில் கலந்துகொண்டதுடன் குடாநாட்டு மக்களின் பிரச்சினைகள் பற்றியும் சுவாமி சித்ரூபானந்தாவிடம் கலந்துரையாடினார்.

மாநகர சபை மேயருடன் யாழ். நகரைச் சுற்றிப் பார்வையிட்டதுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள மூத்த இந்தியப் பிரஜையான ஓய்வுபெற்ற வைத்தியர் திருமதி ரங்கம்மாவைச் சந்தித்துச் சுகநலன்கள் பற்றிக் கேட்டறிந்துகொண்ட தூதவர் ஞாயிறு மாலை கொழும்பு திரும்பினார். (க-10)

### டிறிபேக் கல்லூரி மாணவருக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்7

டிறிபேக் கல்லூரியில் கல்வி கற்று தற்போது இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற தகைமையுள்ள மாணவர்கள் நாளை வியாழக்கிழமை கோண்டாவிலில் இயங்கும் கல்லூரியில் (நிரு கல்வி நிலையம்) காலை 9.00 மணியிலருந்து பி.ப. 2.00 மணிவரை பதிவுகளை மேற்கொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார்.

கிராம அலுவலர் மூலம் சிபார்சு செய்யப்பட்ட குடும்ப வருமான அத்தாட்சிக் கடிதத்தையும் எடுத்து வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு பாடசாலைமூலம் இரண்டாம் தரம் தோற்றவுள்ள மாணவர்களும் அன்று தம் பெயர், விவரங்களை கல்லூரியில் பதிவு செய்யுமாறும் கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (க)

### அம்பனுக்கு மேலும் ஒரு பஸ் சேவையை நடத்தக் கோரிக்கை

வடமராட்சி,மார்ச்7

பருத்தித்துறை - அம்பன் பஸ் சேவையை மேலும் ஒரு சேவையால் அதிகரிக்கும்படி அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றார்கள்.

தற்போது காலை ஒரு சேவையும் மாலை ஒரு சேவையுமாக இரண்டு சேவைகள் மட்டுமே நடத்தப்பட்டு வருகின்றன.

மற்றும் ஒரு சேவையை நடத்துவதன் மூலம் அப்பகுதி மக்கள் மேலும் பயனடைய முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-182)

### யாழ்.ஆயர் தலைமையில்

# ஜனாதிபதியுடன் இன்று சர்வமதக் குழு சந்திப்பு

கொழும்பு,மார்ச்7

யாழ். ஆயர் வண.தோமஸ் சவுந்தரநாயகம் தலைமையிலான சர்வமதக் குழுவினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை இன்று சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளனர்.

ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பு கடந்தவாரம் இடம்பெற இருந்தது. எனினும் பின்னர் ஒத்தி வைக்கப்பட்டது.

பௌத்த பிக்குமார் அடங்கிய இந்தச் சர்வமதக் குழுவை ஜனாதிபதி இன்று சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பில் மட்டக்களப்பு, மன்னார் ஆயர்கள் தவிர்க்கமுடியாத காரணங்களால் கலந்துகொள்ளமாட்டார்கள் என்று தெரியவருகின்றது.

சர்வமதங்களையும் சேர்ந்த குருமார் அண்மையில் வன்னிக்குச் சென்று புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது தொடர்பான விவரங்களை இவர்கள் ஜனாதிபதியுடன் பகிர்ந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



மார்ச் 10 இல் பொன்விழாக் காணும்

உயர்திரு.க.தேவராஜா

(வணிகத்துறைத் தலைவர் - யாழ்.பல்கலைக்கழகம்)

ஊருலகை மதித்து ஒப்பாரும் மிக்காராய்
ஊருலகே மதிக்க உமைப்போன்றோர் யாரிங்கு
பாருலகு என்றும் பணியென்றே ஏங்கும்
பாதிமலர் போற்றும் நாயகனைத் தேடி

A.T.C கல்வி நிலையம், இணுவில்.

திரு.இரா.அருட்செல்வன் இயக்குநர்

(84704)

# பணத்தைச் சேமித்துப் பரிசுகளையும் வெல்லுங்கள்



NSB

## தேசிய சேமிப்பு வங்கி

"உங்கள் குடும்ப வங்கி"

## பரிசூதிய சேமிப்புச் சான்றிதழ்கள் - ரிதீரேகா

**24.02.2001 இல் நடைபெற்ற பரிசூதியச் சேமிப்புச் சான்றிதழ்களின் 23ஆவது சீட்டிழுப்பில் தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணக் கிளையில் பரிசு பெற்ற 152 அதிர்ஷ்டசாலிகளின் விவரம்.**

| | | | | |
|---|---|---|---|---|
| | | | **நான்காம் பரிசு ரூபா 5,000/-** | |
| 001 | 12 P | 0277 | சுகிர்தா சிவராஜா | மானிப்பாய் |
| 144 | 13A | 0293 | உமாதேவி விஜயேந்திரசர்மா | கரவெட்டி |
| 091 | 14S | 0512 | அருணாசலம் தம்பிப்பிள்ளை | இளவாலை |
| | | | **ஐந்தாம் பரிசு ரூபா 2,000/-** | |
| 033 | 12P | 0454 | எஸ்.பஞ்சலிங்கம் | உரும்பிராய் |
| 091 | 15V | 0488 | எஸ். சந்திரசேகரம் | புத்தூர் |
| | | | **ஆறாம் பரிசு ரூபா 1,000/-** | |
| 084 | 14E | 0279 | கே.மகாலக்சுமி | வட்டுக்கோட்டை |
| 080 | 15V | 0489 | பி.அம்பலவாணர் | வட்டுக்கோட்டை |
| 142 | 13G | 0636 | ஆர்.பாலசுப்பிரமணியம் | அரியாலை |
| 055 | 09X | 0488 | ஆர்.வசந்தகுமார் | மானிப்பாய் |
| 039 | 12P | 0492 | என்.ஞானசேகரம் | யாழ்ப்பாணம் |
| 002 | 13H | 0041 | எம்.கனகரட்ணம் | சங்கானை |
| 140 | 12O | 0686 | எம்.மரியநாயகம் | மாதகல் |
| 144 | 15Y | 0892 | எஸ்.பிறேமாவதி | யாழ்ப்பாணம் |
| 120 | 13N | 0486 | ஏ.பழனிப்பழம் | அல்வாய் |
| 140 | 12C | 0557 | வி.மைக்கேல் | பாசையூர் |
| 050 | 12P | 0251 | த.கலாராணி | மாதகல் |
| 050 | 10C | 0441 | ஏ.பத்மதாசன் | நெடுந்தீவு |
| 025 | 14B | 0092 | எஸ்.சரண்யா | அச்சுவேலி |
| 113 | 15Y | 0351 | சுப்பிரமணியம் | வட்டுக்கோட்டை |
| 079 | 12C | 0850 | எஸ்.சுகன்யா | அச்சுவேலி |
| 129 | 14F | 0219 | ரி.ஜெயானந்தன் | கோண்டாவில் |
| 021 | 14B | 0375 | கே.விமலாதேவி | சண்டிலிப்பாய் |
| 002 | 12S | 0744 | ஆர்.புஸ்பநாதன் | இணுவில் |
| 054 | 14B | 0720 | ஜெ.சுஜீபன் | கொக்குவில் |
| 113 | 14F | 0786 | எஸ்.சுதாகரன் | நல்லூர் |
| 016 | 09X | 0437 | என்.கமலரூபன் | யாழ்ப்பாணம் |
| 152 | 13N | 0811 | எஸ்.ஜெகதீஸ்வரி | கோண்டாவில் |
| 070 | 13S | 0086 | எஸ்.சி.ஜெகநாதன் | யாழ்ப்பாணம் |
| 102 | 15V | 0237 | ஆர்.ஜெயலெச்சுமி | கொக்குவில் |
| 026 | 10C | 0170 | கே.சாந்தி | காரைநகர் |
| 010 | 09X | 0498 | எஸ்.புவனராஜாகுகன் | கந்தர்மடம் |
| 012 | 12D | 0553 | பி.நவமணி | உரும்பிராய் |
| 022 | 09O | 0303 | எஸ்.அருளம்பலம் | அரியாலை |
| 046 | 04E | 0884 | கே.கதிர்காமத்தம்பி | திருநெல்வேலி |
| 036 | 04V | 0612 | கே.புஸ்பரட்ணம் | யாழ்ப்பாணம் |
| 086 | 14B | 0684 | ஏ.பூலோகச்சந்திரன் | சங்கானை |
| 058 | 02R | 0079 | ஆர்.செல்வபாக்கியம் | மானிப்பாய் |
| 141 | 14E | 0783 | எஸ்.ஸ்ரீஜீவனம் | யாழ்ப்பாணம் |
| 084 | 14B | 0599 | ஏ.சிவராஜா | யாழ்ப்பாணம் |
| 006 | 14B | 0308 | ஆர்.செல்வராணி | திருநெல்வேலி |
| 081 | 10F | 0561 | கே.ஹம்சினி | மிருசுவில் |
| 014 | 13H | 0712 | ரி.மயில்வாகனம் | கந்தர்மடம் |
| 034 | 10C | 0302 | ரி.இராமச்சந்திரன் | அரியாலை |
| 050 | 13P | 0639 | எல்.கஜந்தா | ஆனைக்கோட்டை |
| 097 | 12D | 0667 | கே.திருமுருகன் | யாழ்ப்பாணம் |
| 066 | 10C | 0619 | கே.வைத்தியநாதன் | நீர்வேலி |
| 128 | 12O | 0209 | கே.பிரியதர்சன் | யாழ்ப்பாணம் |
| 128 | 12O | 0116 | எவ்.ஜெ.டொலிற்றா | சுண்டுக்குளி |
| 121 | 12C | 0095 | வி.சுப்பிரமணியம் | வட்டுக்கோட்டை |
| 058 | 10F | 0355 | எஸ்.கோகுலன் | நல்லூர் |
| 042 | 12P | 0100 | என்.கந்தவேள் | கொக்குவில் |
| 065 | 02R | 0636 | ரி.சின்னராஜா | யாழ்ப்பாணம் |
| 095 | 12S | 0328 | எஸ்.சிவபாலன் | புங்கன்குளம் |
| 059 | 04E | 0325 | ஏ.குலசபாநாதன் | கந்தர்மடம் |
| 063 | 13H | 0030 | எஸ்.ஜசிதரன் | உரும்பிராய் |
| 051 | 10C | 0195 | ஜெ.விக்னேஸ்வரி | கொக்குவில் |
| 057 | 04E | 0200 | கே.இந்துமதி | யாழ்ப்பாணம் |
| 093 | 10F | 0732 | வி.கவிஸ்ரன் | யாழ்ப்பாணம் |
| 093 | 13A | 0973 | பி.சிவானந்தசர்மா | புத்தூர் |
| 076 | 07N | 0620 | பி.குகதாசன் | நல்லூர் |
| 036 | 09O | 0054 | ஆர்.தில்லையம்பலம் | காரைநகர் |
| 006 | 12S | 0697 | எஸ்.குவலயா | யாழ்ப்பாணம் |
| 098 | 12S | 0972 | வை.சண்முகநாதன் | கொக்குவில் |
| 148 | 07W | 0908 | ஆர்.குமாரகுலசிங்கம் | மானிப்பாய் |
| 027 | 13P | 0926 | எஸ்.மணிவண்ணன் | கந்தர்மடம் |
| 146 | 10E | 0595 | கே.முரளிதரன் | உரும்பிராய் |
| 007 | 07X | 0244 | எஸ்.கனகசபாபதி | கந்தர்மடம் |
| 022 | 13P | 0398 | ஆர்.அந்தோனி | குருநகர் |
| 150 | 15Y | 0691 | ரி.வாகினி | பண்டத்தரிப்பு |
| 053 | 12S | 0555 | எம்.உதயகுமார் | உரும்பிராய் |
| 058 | 14B | 0532 | எஸ்.தர்மகுலசிங்கம் | யாழ்ப்பாணம் |
| 046 | 10F | 0878 | எஸ்.நாதசொரூபன் | புத்தூர் |
| 026 | 10F | 0521 | எம்.சந்திரன் | நல்லூர் |
| 001 | 13H | 0921 | எம்.யோகு | கொக்குவில் |
| 118 | 13A | 0117 | ஏ.மயூரன் | கோண்டாவில் |
| 055 | 07N | 0532 | கே.காயத்திரி | சுழிபுரம் |
| 124 | 15Y | 0363 | வை.கோபாலகிருஷ்ணன் | கோண்டாவில் |
| 034 | 14B | 0564 | எம்.நாகராஜா | யாழ்ப்பாணம் |
| 137 | 14F | 0144 | பி.செல்லப்பா | அளவெட்டி |
| 030 | 14B | 0190 | எஸ்.கந்தசாமி | புத்தூர் |
| 123 | 15Y | 0473 | வை.தர்மகிருஸ்ணன் | கோண்டாவில் |
| 125 | 14E | 0124 | வி.நிறோசன் | யாழ்ப்பாணம் |
| 076 | 13S | 0534 | கே.நாகேஸ்வரி | கொக்குவில் |
| 054 | 10F | 0728 | ரி.தயாளன் | அளவெட்டி |
| 030 | 04V | 0727 | பி.தயாபரன் | பண்டத்தரிப்பு |
| 140 | 12P | 0200 | எஸ்.வெற்றிவேலாயுதம் | யாழ்ப்பாணம் |
| 116 | 14F | 0379 | வி.பரம்தில்லைராஜன் | யாழ்ப்பாணம் |
| 056 | 04E | 0947 | ரி.சண்முகநாதன் | சித்தன்கேணி |
| 135 | 03S | 0133 | எம்.ராஜேஸ்வரி | உடுவில் |
| 117 | 13N | 0966 | கே.பார்த்தீபன் | புத்தூர் |
| 028 | 14B | 0898 | ஏ.துஸ்யந்தி | யாழ்ப்பாணம் |
| 045 | 13S | 0423 | ஆர்.தம்பிராஜா | தாவடி |
| 116 | 13S | 0464 | ரி.சிவதாசன் | யாழ்ப்பாணம் |
| 149 | 13O | 0628 | ஆர்.திபாகர் | யாழ்ப்பாணம் |
| 081 | 15V | 0621 | ஜெ.அம்பலவாணர் | வட்டுக்கோட்டை |
| 002 | 12P | 0854 | எஸ்.தர்சனா | புத்தூர் |
| 120 | 12C | 0113 | வி.சுப்பிரமணியம் | வட்டுக்கோட்டை |
| 042 | 13S | 0145 | ஆர்.கண்ணையா | யாழ்ப்பாணம் |
| 085 | 13P | 0801 | வி.சுந்தர்லிங்கம் | மாதகல் |
| 023 | 13B | 0570 | ஸ்ரீதேவராணி | அச்சுவேலி |
| 072 | 04E | 0549 | ஆர்.எஸ்.யோகீஸ்வரக்குருக்கள் | யாழ்ப்பாணம் |
| 139 | 03S | 0366 | எம்.நகுலேஸ்வரன் | யாழ்ப்பாணம் |
| 116 | 03S | 0653 | எஸ்.குமாரகுரு | சாவகச்சேரி |
| 021 | 10C | 0561 | ஆர்.தர்மசீலன் | புத்தூர் |
| 008 | 13O | 0830 | எஸ்.கிரிதரன் | யாழ்ப்பாணம் |
| 125 | 14F | 0738 | ஜெ.நளினி | கொழும்புத்துறை |
| 054 | 10F | 0824 | எஸ்.சியாமளி | கரவெட்டி |
| 143 | 14F | 0053 | ஆர்.நித்தியகுமார் | மானிப்பாய் |
| 138 | 14E | 0477 | ஏ.எட்வின் | யாழ்ப்பாணம் |
| 057 | 07N | 0944 | ஆர்.சுஜீதா | கொக்குவில் |
| 125 | 13N | 0653 | பி.பாஸ்கரன் | யாழ்ப்பாணம் |
| 045 | 10C | 0062 | எஸ்.நாகராஜா | வட்டுக்கோட்டை |
| 045 | 09O | 0667 | எம்.சிவபாதம் | புன்னாலைக்கட்டுவன் |
| 063 | 13P | 0323 | எம்.லக்ஸ்மன் | வட்டுக்கோட்டை |
| 091 | 13P | 0583 | கே.அபர்ணா | வட்டுக்கோட்டை |
| 097 | 09A | 0280 | கே.சி..த்தினம் | யாழ்ப்பாணம் |
| 038 | 05D | 0310 | ...க்னகுமார் | சாவகச்சேரி |
| 037 | 12P | 0989 | எஸ்.அரியராசா | பண்டத்தரிப்பு |
| 091 | 13S | 0834 | ஜெ.வெம்பா | சண்டிலிப்பாய் |
| 117 | 03S | 0638 | எஸ்.அகிலா | வட்டுக்கோட்டை |
| 042 | 04V | 0188 | கே.நிதர்சன் | யாழ்ப்பாணம் |
| 063 | 14P | 0109 | எம்.சேவியர் | யாழ்ப்பாணம் |
| 135 | 14E | 0391 | என்.தேனுகா | கந்தர்மடம் |
| 026 | 09O | 0904 | எம்.பரசுராம் | கல்வியங்காடு |
| 059 | 13P | 0899 | பி.தயாபரன் | பண்டத்தரிப்பு |
| 110 | 18E | 0185 | எஸ்.தனபாலன் | சித்தன்கேணி |
| 129 | 09N | 0587 | வி.ஏ.அட்சயகுமார் | வண்ணார்பண்ணை |
| 046 | 12P | 0781 | எஸ்.பரமேஸ்வரி | வெள்ளவத்தை |
| 123 | 15Y | 0728 | வை.தர்மகிருஸ்ணன் | கோண்டாவில் |
| 080 | 13S | 0882 | ரி.குலசிங்கம் | கொக்குவில் |
| 095 | 13P | 0711 | ரி.வேல்நம்பி | யாழ்ப்பாணம் |
| 070 | 10F | 0477 | வி.கனகரட்ணம் | கொக்குவில் |
| 112 | 12C | 0436 | வி.சரவணமுத்து | யாழ்ப்பாணம் |
| 075 | 10C | 0010 | ஏ.விஜயலட்சுமி | சித்தன்கேணி |
| 021 | 09O | 0313 | வி.சகாதேவசங்கரி | திருநெல்வேலி |
| 108 | 09N | 0834 | கே.மனோகரன் | சுழிபுரம் |
| 009 | 13P | 0496 | எஸ்.தயாளினி | சுன்னாகம் |
| 068 | 04E | 0150 | வி.பொன்னம்பலம் | யாழ்ப்பாணம் |
| 046 | 13S | 0785 | எம்.ரஞ்சிதா | குருநகர் |
| 048 | 04E | 0267 | ஆர்.சன்னிதி | இணுவில் |
| 077 | 09A | 0763 | ஆர்.தம்பிராஜா | நல்லூர் |
| 039 | 05D | 0472 | எஸ்.தனபாலசிங்கம் | நல்லூர் |
| 110 | 09N | 0556 | கே.யோகநாதன் | திருநெல்வேலி |
| 044 | 12P | 0900 | ஜெ.யசோதரா | நல்லூர் |
| 090 | 13P | 0734 | என்.வரதராஜன் | உரும்பிராய் |
| 049 | 04E | 0095 | கே.செந்தூரன் | கோண்டாவில் |
| 014 | 10F | 0949 | எஸ்.சிவானுஜன் | காரைநகர் |
| 100 | 13A | 0155 | எஸ்.மகேந்திரன் | நல்லூர் |
| 011 | 12P | 0223 | எஸ்.சாரதாதேவி | மானிப்பாய் |
| 018 | 12P | 0910 | எம்.சரண்னியா | ஆனைக்கோட்டை |
| 027 | 12P | 0420 | பி.அன்ரனி | யாழ்ப்பாணம் |
| 003 | 13H | 0359 | பி.விக்னேஸ்வரன் | சுன்னாகம் |

**எதிர்வரும் 28.04.2001இல் நடைபெறவிருக்கும் 24ஆவது சீட்டிழுப்பில் அதிக பரிசில்களை வெல்ல அதிக சான்றிதழ்களைக் கொள்வனவு செய்யுங்கள்.**

(C/15570)

# தமிழ் மக்களின் வரலாற்றுச் சான்றுகள்

அந்தோ பரிதாபம்.

ஈழத்தமிழர்களின் பூர்வீக வரலாற்றைச் சான்றுபடுத்தும் பொக்கிஷங்கள் பலவும் கறையான் புற்றினால் மூடப்பட்ட நிலையில். கல்வெட்டுக்கள், நாணயங்கள், ஓடுகள், செங்கற்கள், கையெழுத்துப்பிரதிகள், பத்திரிகைகள், ஏடுகள், எழுத்தாணிகள்,



கலைப் பொக்கிஷங்களுடன் கலைஞானி

சிற்பங்கள் எனப்பலவும் கறையானுக்கு இலக்காகி அழிந்து போகும் நிலையில் பேணுவாரின்றிக் கிடக்கின்றன. ஏறத்தாழ 54 வருடங்களாகத் தன் வருமானம் முழுவதையும், தன் வாழ்நாள் முழுவதையும் அரும் பொருள்களைச் சேகரிப்பதற்காக அர்ப்பணித்துச் செலவிட்ட - ஈழத துப்பாரம்பரியங்களைக் கண்டறிவதற்காகக் கால்கடுக்க நடந்து சிட்டுக்குருவி போல ஈழ நாடெங்கும் பறந்து



வவுனிக் குளத்தில் கலைஞானியின் முயற்சியால் மீட்கப்பட்ட சிவலிங்கம்.

திரிந்த - தமிழர் வரலாற்று எச்சங்களை மீட்ட கலையார்வலன் ஒருவனின் அரும்பெரும் சொத்துக்கள் தமது வாழ்க்கையில் அஸ்தமனத்தைத் தேடிக்கொண்டிருப்பவை போல் அங்கே கிடக்கின்றன.

ஈழத்தமிழர்கள் வந்தேறுகுடிகள்; வரலாறு அற்றவர்கள் அவர்களுக்கென ஒரு கலை, கலாசாரம், பண்பாடு, வாழ்க்கை முறை இல்லை. அத்துடன் அவர்களுக்கென சரித்திரமே கிடையாது என சிங்களப் பேரினவாதிகள் காலம் காலமாகப் பொதுக்கூடங்களிலும், அரசியல் மேடைகளிலும், பாடப்புத்தகங்களிலும் முழங்கி வரும் இந்த வேளையில் தனது இடையறா முயற்சியால் அல்லும் பகலும் சரித்திர வரலாற்றுச் சான்றுகளை ஊர் ஊராகத் தேடித் தொகுத்து ஈழத தமிழரின் பண்டைய வரலாற்றை ஆதாரபூர்வமாக உலகறியச் செய்த உத்தமன் ஒருவனின் அரும் பொக்கிஷங்கள் மழை ஒழுக்குக்கு இலக்காகியும், தூசி படர்ந்த நிலையிலும் கறையான் புற்றுக்கள் முளைத்தெழுந்த நிலையிலும், பூச்சிகள் தமக்கு உணவாக்கும் நிலையிலும் காணப்படுகின்றன.

இவை அனைத்தையும் நேரே பார்க்க வேண்டும், ஈழத்தமிழரின் வரலாற்றுச் சின்னங்கள் அழிந்து போகும் முன் அவற்றைக் காண வேண்டும் என்ற எண்ணம் தங்கள் மனதில் பிறக்கின்றதா?

திருநெல்வேலியிலுள்ள பல்கலைக் கழகத்திற்குச் சமீபமாக - பரமேஸ்வராச் சந்தியிலுள்ள மாடிக் கட்டடத்தினுள் நுழையுங்கள். அங்கே அழிந்து போகும் நிலையிலுள்ள அரிய வரலாற்றுச் சான்றுகளைக் காணலாம்.

குரும்பசிட்டி மண் தந்த தவப்புதல்வர்களில் ஒருவரான மாமனிதர் 'கலைஞானி' அ.செல்வரத்தினம் தான் காடுகரம்பையெல்லாம் தேடிப்பெற்ற அரும் பொருள்களுடன் அந்த மாடி வீட்டில் தனிமனிதராய் வசிக்கிறார்.

தேடிப்பெற முடியாத அரும் பொருள்கள் மற்றும் தொல் பொருள்கள், கையெழுத்துப் பிரதிகள், ஆயுள்வேத மருத்துவக் குறிப்புக்கள், நாணயங்கள், ஈழத்திலும் தமிழகத்திலும் வெளிவந்த பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்ற பல்வேறு அரிய பொருளகளைச், சுவடிகளைச் சேகரித்துத் தமிழ் உலகின் அரும்பொருள் காட்சியகத்தைத் தானே தனித்து உருவாக்கிக் கொண்ட கலைஞானி

# கண்முன்னே அழியும் அவலம் . . .

தனக்கே உரிய அமைதியுடன் இறை விசுவாசத்துடன் அங்கே வாழ்கிறார்.

தொல்பொருள் ஆய்வு ஓவியம், சிற்பம், நாடகம், படப்பிடிப்பு போன்ற பல துறைகளில் முத்திரை பதித்த தன்னடக்க மனிதன் மாமனிதர் 'கலைஞானி' அ.செல்வரத்தினம் தற்போது ஆற்றுவார் இன்றித் தனியே வாழ்ந்து வருகிறார்.

கலைஞானி செல்வரத்தினத்தை அறியாதவர்கள் எவருமே ஈழத்தில் இருக்க முடியாது. தமிழர் வரலாற்றுடன் தொடர்புடைய அரிய பல தொல் பொருள்களை சேகரித்துப் பேணுவதில் தன் வாழ்நாளின் பெரும் பகுதியை அர்ப்பணித்தவர் அவர். தான் அரும்பாடுபட்டுச் சேகரித்த அரிய கலைப் பொக்கிஷங்கள் இன்று தன் கண்முன்னாலேயே அழிந்து கொண்டிருப்பதைக் கண்டு உள்ளம் வெதும்பி நிற்கின்றார் இந்த மாமனிதர். கைவிடப்பட்ட ஒரு வீட்டில் தன் பிள்ளைகள் போல பேணிச் சீராட்டும் அரும் பொருள்களுடன் வாழ்வின் கடைசிக் காலத்தை கழித்து வருகிறார் அவர். இலங்கையில் வேறு எந்த நூதனசாலையிலும் காணமுடியாத அரிய பல பொருள்கள் அவர்வசம் உள்ளன. உலக தொல்பொருளியலாளர்களே வியந்து பாராட்டிய பெருமைக்குரியவர் கலைஞானி. இன்று தள்ளாத வயதில் அவற்றைப் பேணிப் பாதுகாக்க முடியாமல் தவிக்கிறார்.



கலைஞானி வசமுள்ள மிகத் தொன்மையான சேது நாணயங்கள்.

அறிக்கைகள் மூலம் தம்மைத் தமிழின விடுதலை விரும்பிகளாகக் காட்டிக்கொள்ள முற்படும் அரசியல்வாதிகள் தமிழை வளர்ப்பதாக மார் தட்டிக்கொள்ளும் உயர் கல்விப் பீடங்கள் மற்றும் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் தாங்களே என நாடாளுமன்றம்வரை புலம்பித்திரியும் உறுப்பினர்கள் என எவருமே கலைஞானியின் அரும் பொருள்களை - ஈழத் தமிழரின் பூர்வீகச் சொத்துக்களை - பேணிப் பாதுகாக்க இதுவரை எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அதற்கு முன்வரவும் இல்லை என எண்ணத் தோன்றுகின்றது.

"ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை பேச, எழுதப் பயப்படுகிறார்கள். நாடு அந்தளவுக்குச் சீரழிந்துவிட்டது. ஆரம்ப காலங்களில் தமிழ் - சிங்கள உறவு சிறப்புற்றிருந்தது. கலப்புத் திருமணங்கள் பல இடம் பெற்றன. துவேச மனப்பான்மை தோன்றத் தொடங்க தமிழனைக் கொல், கொல் என்ற கோசம் வானைப் பிளந்தது. தமிழர்கள் அன்று தொடக்கம் அழிந்து கொண்டே இருக்கிறார்கள்; அழிக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். தமிழர்களை இலங்கையில் வந்தேறு குடிகளெனப் பெரும்பான்மை இனத்தவர்கள் கூறிவரும் வேளையில் இங்குள்ள பலரும் அதனைப் பார்த்துக்கொண்டு வெறுமனே வாளா விருக்கிறார்கள்.

"வடக்கு - கிழக்கில் அரும்பொருளகளைப் பாதுகாப்பதற்கென அரசாங்கம் ஆண்டுதோறும் பல லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்வதாகப் பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரமாகின்றன. ஆனால் அரும்பொருள்கள் பாதுகாக்கப்பட்டதாகவோ அல்லது பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவோ தெரியவில்லை."

இவ்வாறு தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகிறார் கலைஞானி.




கலைஞானி வசம் உள்ள பத்திரிகைப் பிரதிகளில் இதுவும் ஒன்று. 1917 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி வெளியான 'சத்தியவாணி' பத்திரிகை இது. முகப்பில் பிரிட்டிஷ் இராணுவத்தின் விமான எதிர்ப்புப் பீரங்கி.

வடக்கு - கிழக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் 1997 இல் ஆரம்பித்த அரும் பொருள் காட்சியகம் அமைக்கும் திட்டம் தற்போதும் தொடர்வதாகவே அந்தத் திணைக்களம் விடுக்கும் சுற்றறிக்கைகள் மூலம் தெரிய வருகிறது. ஆனால் இன்றுவரை அரும்பொருள்கள் எவையும் சேகரிக்கப்பட்டதாகத் தகவல்கள் இல்லை. கடந்த ஐந்து வருடங்களாக ஆண்டுதோறும் இந்தத் திட்டத்துக்காகப் பெருந்தொகைப் பணம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எனினும் அந்த நிதி எங்கே போகின்றது?

"பல்வேறு துன்பங்கள், சிரமங்களின் மத்தியில் நாம் தேடிய அரும் பொருள்கள் பலவும் அண்மைய இடம்பெயர்வுகளின்போது அழிக்கப்பட்டு விட்டன. எனினும் என்னால் இயன்ற வரை தற்போது பாதுகாத்து வருகிறேன். எனினும் இவற்றைப் பாதுகாப்பதற்கு எவ்வித நிதியும் என்னிடம் இல்லை. அத்துடன் இந்த அரும் பொருள்களை எனக்குப் பின்னர் பேணிப் பாதுகாப்பதற்கும் எவரும் இல்லை. எனவே எனது மறைவுடன் இந்தப் பொருள்களுக்கும் அஸ்தமனம் ஏற்படப்போகின்றது என்பதை நான் தினந்தோறும் - நிமிடந்தோறும் எண்ணிக் கவலைகொண்டிருக்கின்றேன். இந்தக் கவலையே விரைவில் எனது மறைவுக்குக் காரணமாக அமைந்துவிடும் என்ற அச்சமும் என்னிடம் தோன்றியுள்ளது.

"நான் தேடிய அரும்பொருள்களை மன விருப்பத்துடன் பாதுகாக்க விரும்புவோர் எவர் முன்வரினும் அவற்றை அவர்களிடம் ஒப்படைக்க நான் தயாராகவுள்ளேன். இவ்வாறு முன் வருபவர்கள் தாம் பொறுப் புணர்வுடன் அரும்பொருள்களைப் பாதுகாப்போம் என்ற வாக்குறுதியை எனக்கு அளிக்க வேண்டும்.

"ஒரு தேசிய இனத்தின் முக்கிய பரிமாணம் அதன் வரலாறு ஆகும். கொடியோடும், முடியோடும் வாழ்ந்த தமிழ் பேசும் மக்களின் வரலாறு பேரினவாத வரலாற்று ஆசிரியர்களால் இன்று பாடப் புத்தகங்களின் ஊடாக திரிக்கப்பட்டே கூறப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களது வரலாற்றுச் சான்றுகளையும் தொல்லியல் சான்றுகளையும் பாதுகாக்க வேண்டியது தமிழ் மகன் ஒவ்வொருவனதும் தலையாய கடமை என நான் கருதுகின்றேன்.

## கலைச்சுடர்

தயாரிப்பு:-நர்த்தகன்

"பல லட்சம் ரூபா செலவில் எமது மண்ணில் கலாசார மண்டபங்கள், திறந்தவெளி அரங்குகள் எனப் பல கட்டடங்கள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. இதேவேளை - எமது கலாசாரத்துக்கே உரித்தான அரும் பொருள்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் எவர் மனதிலும் உருவாகியதாகத் தெரியவில்லை. புனர்வாழ்வு, புனரமைப்புப் பணியில் ஈடுபடுவோர் இந்த அரும் பொருள்களைப் பேணிப் பாதுகாத்துத் தமது வரலாற்றுக் கடமையைச் செய்ய வேண்டும் எனத் தமிழ் உலகம் தற்போது எதிர்பார்த்து நிற்கின்றது.

**சந்திப்பு:**
**ஆனந்தன்**

"வளர்ந்துவரும் விஞ்ஞான வளர்ச்சி காரணமாகத் தொல்பொருள் சான்றுகளைக் கணனி மயப்படுத்தும் திட்டம் அண்மையில் கண்டியில் யாழ்ப்பாணத்துத் தமிழர் ஒருவரால ஆரம்பிக்கப்பட்டதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன. இப்படியானதொரு நல்ல முயற்சியாவது நான் சேகரித்த அரும்பொருள்களுக்குக் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கின்றேன்" - என்றார் கலைஞானி.

அவரது தீராத ஆசை நிறைவேறுமா? ☆

---

# பாகுபாடு களைவோம்!

"நினிவே மக்கள் தங்கள் தீய நெறியை விட்டு திரும்பினார்கள்"

யோனா 3:1-10
லூக் 11:29-32

சிறப்பாக மனமாற்றத்தின் காலம் தவக்காலமாகும். மன மாற்றம் என்பது எமது வாழ்வில் கடினமான செயல். ஆனால் அதுவே எம்மை இறைவனிடம் அழைத்துச் செல்லும் கருவி. நாம் எமது வாழ்வில் துன்பங்கள் வரும் போது இறைவனை நிந்தித்து பழி கூறுகிறோம். ஆனால் இத்துன்பங்களே எம்மைத் தூய்மைப்படுத்துகின்றன என்பதை மறந்து விடுகிறோம். எம் ஒவ்வொருவரினுடைய வாழ்விலும் வேதனை

## தவக்கால சிந்தனை

யின் சுவடுகள் ஆழப் பதிந்திருக்கின்றன. எமது வாழ்வில் நாம்படும் ஒவ்வொரு கசையடிகளும் யேசுவிற்கு நாம் கொடுத்தவைகள்தாம்.

சமூகத்தில் எனது பிழைகளை ஏற்றுக்கொள்ள மனமில்லாது பிறர் பிழைகளை சுட்டிக்காட்டி எத்தனை தடவை வாழ்ந்திருக்கின்றேன். அடுத்தவன் துன்பத்தில் மகிழ்ச்சி கண்டிருக்கின்றேன். நான் எனது குடும்பம் என்ற சுயநலத்தில் வாழ்ந்திருக்

**8 ஆம் நாள்**

கின்றேன். சிந்திப்போம். ஆகவே சாதி, இனம், மதம்,மொழி, நாடு என்ற எல்லைகளைக் கடந்து சமூகத்தில் வாழும் ஒவ்வொருவனும் இது வரை நடந்துவந்த தீய வழிகளை விட்டுவிட உறுதிபூண்டு மனம்மாறி எமது சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் இறைவனின் அடையாளம் என உணர்ந்து அவர்களில் இறைவனைக் கண்டு பிறருக்கு உதவி செய்து வாழ முடிவெடுப்போம்.

**ஓா. மேசிசுஜந்தினி,**
*நாவாந்துறை.*

## கலைப்பீட மாணவர்களுக்கான பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் நாளை (08-03-2001) வியாழன் நண்பகல் 12.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெற இருப்பதால் அனைத்து வருட கலைப்பீட மாண வர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(84984)

உ
சிவமயம்

## பாராட்டி வாழ்த்துகிறோம்



செல்வன்

## ஜோதீந்திரக் குருக்கள் சிவராமசர்மா

ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக் கழகம், பாடசாலை மாணவர்களிடையே சர்வதேச ரீதியில் நடத்தும் வருடாந்த பரீட்சைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் கணித பாடத்தில் அதி விசேட சித்தி பெற்று தங்கப்பதக்கம் பெற்றுள்ள யாழ். இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் ஜோதீந்திரக் குருக்கள் சிவராமசர்மா அவர்களை மேலும் பல்கலைகளிலும் சிறந்தோங்குமாறு பாராட்டி வாழ்த்துவ துடன் அவருக்கு கல்வி பயிற்றுவித்த ஆசிரியப் பெருந் தகையினரையும் நாம் நன்றியுடன் பாராட்டுகிறோம்.

(84972) - உறவினர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு
23 - 12 - 1924



இறப்பு
05 - 02 - 2001

அமரர்

## மயிலர் அந்தோனிப்பிள்ளை

(புத்தளம் பாலாக்குடா சந்தானமாதா கோயில் முன்னாள் மூப்பரும் கட்டுவன் மேற்கு பத்தாம் பத்திநாதர் கோயில் ஸ்தாபகரும்)

தோள் மீது சுமந்து எமக்குத் தொட்டிலாய் மாறி நின்று கால்மீது முள்பட்டால் கண்ணெல்லாம் நீராய்ச் சிந்தி - பால் பழம் தேடித் தந்து பசியெல்லாம் போக்கி வைத்துப் பூவினைப்போல் எம்மைப் புனிதமாய்ப் பேணி நின்ற தாய் மனக்கோயிலொங்கள், குடும்பத்தின் குலவிளக்கு! மயிலர் மைந்தன் அந்தோனிப்பிள்ளையின் ஆத்மா சாந்தி பெற பரிசுத்த ஆவியிடம் வேண்டுகின்றோம்.

துயரச் செய்தி கேட்டு ஆறுதல் கூறியும் அனுதாபம் தெரிவித்தும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (7.3.2001) புதன்கிழமை காலை (புதியநேரம்) 6.30 மணிககு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக் கப்படும். தொடர்ந்து நண்பகல் நடைபெறும் மதிய போசன நிகழ விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி: பிலோமினா.
மகன்: றுத் தேவதாஸ்.
மருமகள்: பெற்றினா.
பேரன்: றொபின்.
மகள்: மேரி யசிந்தா.
மருமகன்: அன்ரன் சிவலிங்கம்.
பேரப்பிள்ளைகள்: ஆன்மேரின், அனிஸ்ரன்,
பெறாமகன்: மா.கனகரத்தினம் (J.P),
மைத்துனர்: யோசேப் (குடும்பம்) மற்றும்
உற்றார், உறவினர், நண்பர்கள்.

நிரந்தர முகவரி:
*கட்டுவன் மேற்கு,*
*தெல்லிப்பழை.*
தற்போதய முகவரி:
*82/18, 3ஆம் ஒழுங்கை,*
*பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(85003)

## தென்னிந்தியத் திருச்சபை ஆதீனம் நிதியுதவி

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட இந் தியாவின் குஜராத் மாநில மக்களின் நிவாரணப் பணிகளுக்கு தென்னிந்தி யத் திருச்சபையின் யாழ். ஆதீனம் நிதியுதவி வழங்கியுள்ளது.

கடந்த வாரம் வட்டுக்கோட்டை யில் தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் வருடாந்தக் கூட் டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட குஜராத் மாநில மக்களுக்கு அனுதாபம் தெரி வித்து தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டது.

அத்துடன் இம்மக்களின் நிவார ணப் பணிகளுக்கு உதவும் பொருட்டு உடனடியாக இரண்டு லட்சம் ரூபாவை வழங்குவது என்றும் தீர்மானிக்கப் பட்டது. (க-9)

## வரணியில் கைதான 7 பேருக்கும் விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,மார்ச்7

விடுதலைப் புலிகளின் எல்லைப் படையைச் சேர்ந்தவர்கள் எனக் கூறி காங்கேசன்துறை குற்றத் தடுப்பு பொலீஸாரினால் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்ட 7 பேரையும் எதிர் வரும் 19ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிவான் இ.த.விக்ன ராஜா உத்தரவிட்டார்.

வரணிப் பகுதியில் வைத்து கடந்த மாதம் 4ஆம் திகதி இராணுவத்தி னரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் அந்த 7 பேரினதும் பெயா விவரங்கள் வருமாறு:-

நல்லதம்பி கேதீஸ்வரன் (பூந கரி), கந்தசாமி லோகேஸ்வரன் (பூந கரி), பாலசுந்தரம் கோபாலகிருஸ்ணன (கிளிநொச்சி), றட்ணம் ராஜா (இர ணைமடு), கிருஷ்ணபிள்ளை சிறீ ஆனந்தரூபன் (இராமநாதபுரம், கிளி நொச்சி), தம்பையா தயாபரன் (இராம நாதபுரம், கிளிநொச்சி), தேவராஜா கதபொன்கலன் தங்கராஜா (வட்டக் கச்சி, கிளிநொச்சி),

இவர்களிடம் இருந்து ஆயுதங்க ளையும் தாம் கைப்பற்றியதாக இரா ணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது. மேற்படி 7 பேரையும் விளக்க மறியலில் வைக்குமாறு காங்கேசன் துறை குற்றத்தடுப்பு பொலீஸார் நீதி வானிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

அதனை ஏற்றுக்கொண்ட நீதி வான் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்ததுடன் குறித்த 7 நபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

(ஐ-6-ரி)

## ப.நோ.கூ.சங்கக் கிளையில் திருட்டு

தென்மராட்சி,மார்ச்7

அல்வாய் தெற்கு பகுதியில் உள்ள கொடிகாமம் ப.நோ.கூ.சங்கக் கிளைக் கடை கடந்த சனிக்கிழமை இரவு திருடர்களின் கை வரிசைக்கு இலக்காகியுள்ளது.

ஓடுகளைப் பிரித்து உள்ளே இறங் கிய திருடர்கள் சிகரெட், பால்மா, பற்றறிகள், ரொபி பைக்கற்றுகள் உட்பட பல பொருள்களைத் திருடிச சென்றுள்ளதாக சங்கத் தலை மையகத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

திருட்டுப்போன பொருளகளின் பெறுமதி ரூபா 10 ஆயிரத்துக்குமேல் இருக்குமென்று ஆரம்பக் கட்ட மதிப பீடு மூலம் தெரியவந்துள்ளது.

(க-31-117)

## கைலாசபதி கலையரங்கில் உயிர்விசை

யாழ்.பல்கலைக்கழக முகாமைத் துவக் கற்கைகள் வணிகபீட மாண வர் ஒன்றியத்தினரது "உயிர்விசை" எனனும் நாடகம் இன்று புதன் கிழமை பி.ப. 3.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நாலாவது தடவை யாக மேடையேறுகின்றது.


தமிழனது அவல வாழ்வையும், நாட்டில் தலைவிரித்தாடும் யுத்தத் தின் சோகங்களையும் சித்திரித்துக் காட்டும் இந்த நாடகத்தின் மூலம் திரட்டப்படும் நிதியை காணாமற் போனோர் குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வழங்கத் திட்டமிட்டிருப்பதாக மாண வர் ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரி வித்தார்.

இந்த நாடகத்தின் இன்றைய அரங்கேற்றத்தை அருட்தந்தை ஏ.ஐ. பேர்ணாட் அவர்கள் ஆசியுரை வழங்கி ஆரம்பித்து வைப்பார்.

(க-6)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY




## செல்வன் உ.மிலானன்

(07-03-2001)

இலண்டனில் வசிக்கும் திரு.திருமதி உதயச்சந்திரன் உதயந்தி தம்பதிகளின் செல்வப்புதல்வன **மிலானன்** தனது முதலாவது பிறந்த நாளை இலண்டனில் இருக்கும் தனது இல்லத்தில் இன்று (07.03.2001) புதன்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, இலண்டனில் வசிக்கும் நிசாந்தி அன்ரி, பொவிச் சித்தப்பா, ஜனாமாமா, ரவிப்பெரியப்பா, பெரியம்மா குடும்பம், ஜெயாப் பெரியப்பா, பெரியம்மா குடும்பம், பேரன் சிவசுப்பிர மணியம் குடும்பம், குமரேசன் குடும்பம், இந்தியாவில் வசிக் கும் அப்பப்பா, அப்பம்மாமார், குமார்மாமா, வதனி அத்தை, மச்சான்மார், மச்சாள், கனடாவில் வசிக்கும் மாமாமார், மாமிமார், அம்மம்மா, அன்ராமார், பேரன் தியாகலிங்கம் குடும்பம், ஜேர் மனியில் இருக்கும் அன்ரா, சித்தப்பா, கொழும்பிலிருக்கும் இராஜகோபால் குடும்பம், நீர்வேலி வடக்கிலிருக்கும் அம்மப்பா, அமமம்மா, பூட்டிமார், விஷாந்தன் மாமா, கிஷேந்திச்சித்தி மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் நீர்வேலி வாய்க்காற் றரவை விநாயகரின் அருள்பெற்று பல்கலையும் கற்றுப் பல் லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

K.விஷாந்தன் (மாமா)

(84941)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10 - 05 - 1939



மறைவு
16 - 02 - 2000

உரும்பிராய் மேற்கு
திருமதி
**சின்னத்தங்கம் விக்கினேசுவரன்**

திதி: இன்று 07-03-2001 புதன்கிழமை

அன்புக்குரியோய்!

எங்கள் குடும்பத்தில் குலவிளக்காகப் பிரகாசித்த நீர் எமை விட்டுத் திடீரெனப் பிரிந்து ஆண்டு ஒன்று ஆகின்றது.

உமது திருவுருவமும், உம்மைப் பற்றிய நீங்காத நினைவுகளும் எங்கள் உள்ளங்களில் ஆழப்பதிந்துள்ளன. என்றென்றும் மறக்க முடியாதவை அவை.

எங்கள் குடும்பத்தின் தங்கமணியான உமது ஆன்மா சாந்தி யுறும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை மனதில் இருத்தி நாம் அனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி!

- குடும்பத்தினர்.

*'திருவேரகம்'*
*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.*

(84973)


உங்கள் பிள்ளைக்கு
இதமான
அரவணைப்பு
தனது பிள்ளைக்கு
சிறந்ததையே
தர விரும்பும்
ஒவ்வொரு
அன்னையரினதும்
ஒரே தெரிவு
பேபி ஷெரமி...
Baby Cheramy
Powder
Extra Absorbent
FOR BABY'S TENDER SKIN
200 g
Baby Cheramy
Cream
200 ml
Baby Cheramy
Cologne
FOR BABY'S TENDER SKIN
250 ml
Baby Cheramy
Oil
100 ml
Baby Cheramy
Shampoo
Baby Cheramy
Soap
பேபி ஷெரமி
றூபா பன்முக வர்த்தகம்
104A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
ஹேமாஸ் நிறுவனத்தின் தரமான தயாரிப்பு
(C/15498)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## திருமண சேவை

எங்களிடம் எல்லா மதங்களிலும் மணமக்கள் உண்டு. புகைப்படம், ஜாதகங்களுடன் தொடர்புகொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (85018)

## வீடு வாடகைக்குத் தேவை

தாய், இரு மகன்மார், ஒரு மகள் ஆகிய நாலுபேர் கொண்ட குடும் பத்துக்கு பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் 3 மைல் சுற்றாடலில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்புகளுக்கு விள.இல.1231, மே/பா உதயன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (84989)

## SPOKEN ENGLISH

கலபமாக ஆங்கிலம் பயில தபால் மூலமும் (அரசில் பதிவு செய்து அங்கீகரிக்கப் பெற்ற தனியார் பாடசாலை) ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (84983)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மின்சாரத்தில் இயங்கும் WATER PUMP உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். A.சிவகுருநாதன், 102, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (84947)

யாழ்.இந்துக் கல்லூரிக்குச் சமீபமாக 1 1/4 பரப்பு 3 குழி காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- கு.வித்தியானந்தன், 384, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (84986)

RECORDING BAR க்கு உகந்த புதிய DENON AUDIO DEUC DRM 650S, பாவித்த DENON AUDIO DEUC DRM 650S, TECHNICS 250W AMP, TECHNICS BOX SB1990 -2 1/2' உயரம் 200W என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: N. SIVAKUMAR (ராஜன்) பஸ்நிலையம், அச்சுவேலி. (84881)

## சேவை

உங்கள் சர்வதேச தொலைத் தொடர்புகளை (IDD) எங்கள் ஊடாக மிக மிகக் குறைந்த கட்டணத்துடன் அழைக்கலாம். தொடர்பு கொள்க: 01-552238) (C/15583)

## தவறிவிட்டது

கைதடி கிழக்கு கைதடியைச் சேர்ந்த பொன்னையா கந்தசாமி என்பவரின் விசேட அடையாள அட்டை (இல.091000376) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி காரியாலயத்தில் ஒப்படைத்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன். (84988)

கச்சாய் வீதி, சாவகச்சேரியைச் சேர்ந்த லோறன்ஸ் நிமலன் என்பவருடைய விஷேட அ.அ.(091051231) சண்டிலிப்பாய்ப் பகுதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீ அம்பாள் தொலைத்தொடர்பகம், சண்டிலிப்பாய், கட்டுடை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (84987)

28, சுப்பிரமணியம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் பஞ்சாட்சரம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல.543390887V) திருநெல்வேலிச் சந்தியில் நல்லூர்க் கோயிலுக்கும் இடையில் 10-02-2001 அன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். (85007)

தனங்களப்பு, சாவகச்சேரியைச் சேர்ந்த ஆனந்தராஜா சுஜிதா என்பவருடைய விசேட அ.அட்டை (இல. 091052131) சித்தன்கேணி வட்டு இந்துக் கல்லூரிக்கண்மையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வட்டு.இந்துக் கல்லூரியில் ஒப்படைக்கவும். (85011)

இடம்பெயர்வு காரணமாக முக்கிய ஆவணங்களான வங்கி ஊழியர் சேமலாப நிதிய பத்திரங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆவணங்களில் உள்ள விலாசமான அண்ணாமலை சிறிஸ்கந்தராஜா, நாவலர் பாடசாலை ஒழுங்கை, கோப்பாய் தெற்கு அல்லது சித்திராலயா ஸ்ரூடியோ, 172, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (85015)

### தேங்காய் திருடியவர்கள் சிக்கினர்

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் பகுதியில திருட்டுத்தனமாகத் தேங்காய் பிடுங்கியவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கைகள் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் பொது மக்கள் பார்வைக்கு அங்குள்ள சோதனைச் சாவடி முன் நிறுத்தப்பட்டனர்.

இங்குள்ள இராணுவ சோதனைச் சாவடியின் பின்புறமாகவுள்ள காணியிலேயே இவர்கள் தேங்காய் பிடுங்கினார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-5)

### 25 நீர் இறைக்கும் இயந்திரங்கள் தயார் நிலையில்

கைதடியில் மக்கள் மீளக் குடியமரும் பகுதிகளிலுள்ள கிணறுகளைத் துப்புரவு செய்வதற்கு கமநல சேவைகள் திணைக்களத்தினால் 25 நீர் இறைக்கும் இயந்திரங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் அபிவிருத்திப் புனர்வாழ்வு, புனரமைப்பு வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சினால் கடந்த வாரம் கைதடி மீள் குடியமர்வு தொடர்பாக நடத்தப்பட்ட கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டதற்கு அமைய -

கமநல சேவைகள் திணைக்களம் மேற்படி நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-5)

### அச்சுவேலி மத்திய கல்லூரி எனப் பெயர் மாற்றம்

அச்சுவேலி மகா வித்தியாலயம் 'அச்சுவேலி மத்திய கல்லூரி' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தலை வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவலகள் அமைச்சு வெளியிட்டுள்ளது.

1892 ஆம் ஆண்டு அச்சுவேலி தென்னிந்தியத் திருச்சபை வளவில் அமெரிக்க தேவாலய மிசன் ஆங்கில பாடசாலை என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை 1920 இல் கிறிஸ்தவக் கல்லூரி என்ற பெயருடன் செயற்படத் தொடங்கியது.

1960இல் பாடசாலைகள் சுவிகரிக்கப்பட்ட போது அச்சுவேலி மகா வித்தியாலயம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. (க-11)

---

# பாராட்டுகின்றேன்



வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும், தீவகக் கல்வித் திணைக்களத்தில் சமூகக்கல்வி ஆலோசகராகக் கடமை புரிபவருமான

## திரு.சு.திசநாயகம்பிள்ளை

அவர்கள் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

க.சங்கைவேணியன்
திலக்ஷனா தொலைத்தொடர்பு நிலையம், வங்களாவடி சந்தி, வேலணை.
தொலைபேசி இல:- 070-212557
(85009)

---

# கவிதைத்தொகுதி வெளியீட்டு விழா

சஞ்சீவியில் வெளிவந்த

**பசிப்பிணி மருத்துவன்**

குறுங்காவியமும் தனிக்கவிதைகளும்.

*நூலாசிரியர்:* புலவர் ம.பார்வதிநாதசிவம்
*தலைவர்* : செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்.
*இடம்* : யாழ். இந்துக்கல்லூரி, குமாரசுவாமி மண்டபம்.
*காலம்* : 11.03.2001 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணி (புதியநேரம்) (84977)

---

# மணிவிழா வாழ்த்துக்கள்

எமது சங்கத்தில் தலைவர், செயலாளர் பதவிகளை ஏற்று சங்கத்தின் வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தவரும், தற்போதைய போஷகரும் சிறந்த தொழிற்சங்கவாதியும், பேச்சாளரும், சங்கானை ப.நோ.கூ.சங்கத்தின் பொது முகாமையாளராகவும் இருந்து இன்று ஓய்வு பெறும்



## உயர்திரு. பெரியதம்பி கனகரத்தினம்

அவர்களை மனதார வாழ்த்துவதுடன் மணிவிழா நாயகராக மிளிர்ந்து சௌபாக்கியங்களும் பெற்று அவர் நீடூழி வாழ வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"செந்தமிழோடியர் சைவமும் வாழ ஜெகமிதில் உழைத்திடுவோம்"

-இந்து வாலிபர் சங்கம்,
வட்டுக்கோட்டை.
(85010)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 05 - 10 - 1908



உதிர்வு 05 - 02 - 2001

## அமரர் வேலாயுதர் ஆறுமுகம்

(உரிமையாளர் ஆறுமுகம் தேநீர்ச்சாலை, சாவகச்சேரி)

எமது குடும்பத்தலைவர் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், முன்னின்று உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், யாழ்ப்பாண வணிகர் கழகம் மற்றும் தொலைபேசி, கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், எமது இதயங் கனிந்த நன்றியறி தலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த 05.02.2001 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வேலாயுதர் ஆறுமுகம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 05.03.2001 திங்கட் கிழமை காலை வில்லூன்றித் தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிரியைகள் இன்று (07.03.2001) புதன்கிழமை பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப் பதோடு மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*முதலாம் வட்டாரம், புங்குடுதீவு.* (85013)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

இகத்தில் 1953 - 02 - 27



பரத்தில் 2000 - 03 - 17

## கனகரத்தினம் மதியாபரணம்

"அன்பான அப்பாவே! உங்கள் அன்பு - முகத்தை எந்த ஜென்மத்தில் இனிக் காண்போம் அப்பா? ஒரு கணப்பொழுதில் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாப் பயணம் சென்றதேனோ? உங்கள் ஆத்மா சாந்தியடைய இந்நாளில் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*புகையிரத நிலைய வீதி, கொடிகாமம்.* (84875)

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

---

# ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 - 01 - 1929



இறப்பு 14 - 03 - 2000

## திருமதி செல்லையா தங்கம்மா

திதி: துவாதசி - 07-03-2001

ஆண்டொன்று கனவுபோல் அகன்றோடி மறைந்ததம்மா!
அமைதிமொழி நின்முகம் அனைவரதும் மனத்திரையில்
மீண்டொருகால் எம் குடியில் விரும்பிவந்து உதித்திடம்மா!

*அன்னங்கை, உரும்பிராய்மேற்கு, உரும்பிராய்.* (84998)

கலங்கி நிற்கும் கலாராணி (மகள்)

# இந்தியாவில் சுரங்கம் இடிந்ததில் 6 தொழிலாளர் பலியென அச்சம்!

மும்பை, மார்ச் 7

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் நிலக்கரிச் சுரங்கம் இடிந்ததில் 6 தொழிலாளர்கள் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

மாநிலத்தின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள ரோயல் பாரி – துர்காபூர் நிலக்கரிச் சுரங்கத்தின் ஒரு பகுதியே இடிந்துள்ளது.

நேற்று முன்தினம் காலையில் தொழிலாளர் குழு ஒன்று சுரங்கத்துக்குள் சென்றிருந்ததாகவும்--

பிற்பகல் 12.30 மணியளவின் சுரங்கத்தின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்துமூடிக் கொண்டதாகவும் கூறப்படுகிறது.

சுரங்கம் இடிந்த போது உள்ளே சிக்கிய 6 தொழிலாளர்களும் இடிபாடுகளுள் சிக்கி உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இந்த விபத்துக்கு சுரங்க நிர்வாகத்தின் அசிரத்தையே காரணம் என்று தொழிலாளர் சங்கம் குற்லஞ்சாட்டியுள்ளது.

இந்திய உப கண்டத்தில் பரவலாக நிகழ்ந்து வரும் பூமியதிர்ச்சிகளால் சுரங்கங்கள் பாதிப்படைவது இத்தகைய விபத்துக்கள் ஏற்படக் காரணமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## இரு இந்தியப் பெண்கள் உட்பட

# 36 ஹஜ் யாத்திரிகர்கள் நெரிசலில் சிக்கி மரணம்

மெக்கா, மார்ச் 7

சவூதி அரேபியாவில் ஹஜ் யாத்திரையின்போது ஏற்பட்ட நெரிசலில் மிதிபட்டு இரு இந்தியப் பெண்கள் உட்பட 36 யாத்திரிகர்கள் உயிரிழந்தனர்.

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த 55 வயதான ஜமீலா பீஷேக், சப்னாபீபீ ஆகியோரே உயிரிழந்த இந்தியப் பெண்கள் எனக் கூறப்படுகிறது.

இறைதூதர் நபிகள் நாயகம் (ஸல்) தமது கடைசிச் சொற்பொழிவை ஆற்றிய 'ஜபாலே ரஹ்மாத்' அமைந்துள்ள மைதானி அரபாத்தில் 3 நாள்கள் முன்னர் 160 நாடுகளைச் சேர்ந்த சுமார் 20 லட்சம் ஹஜ் யாத்திரிகர்கள் புனித ஹஜ் தொழுகை நடத்தினார்கள்.

தொழுகை நடத்திய பின்னர் 'முஸ்தலிபா விபிலே' என்று குறிப்பிடப்படும் கூழாங்கற்களை எடுத்துக் கொண்டு யாத்திரிகர்கள் மிலானுக்குச் சென்றனர்.

நேற்றுமுன்தினம் மைனாவில் சாத்தானைக் குறிக்கும் 3 தூண்களின் மீது கூழாங்கற்களை யாத்திரிகர்கள் வீசும்சடங்கு இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

அப்போது ஏற்பட்ட நெரிசலில் யாத்திரிகர்கள் பலர் நிலத்தில் விழ நேரிட்டது அவர்கள் மீண்டும் எழமுடியாதபடி நெரிசல் மிகுந்திருந்ததால் 36 யாத்திரிகர்கள் மிதிபட்டு உயிரிழந்தனர்.

1998 ஆம் ஆண்டுஹஜ்யாத்திரையில் மைனாவில் 118 யாத்திரிகர்கள் நெரிசலில் சிக்கி இறந்தது குறிப்பிடத்தக்கது.

(ஒ-ம,7)

## உலக அரங்கில்

# அமெரிக்காவில் மாணவன் சுட்டு 6 பேர் படுகாயம்!

வாஷிங்ரன், மார்ச் 7

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் சண்டியாகோவில் உயர்தரப் பாடசாலை ஒன்றில் மாணவன் ஒருவன் கண்மூடித்தனமாகத் துப்பாக்கியால் சுட்டதில் 6மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்த மாணவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# விசாரணைகளை நிறுத்தக்கோரி மனுத் தாக்கல்

சென்னை, மார்ச் 8

தனக்கு எதிராக வருமானத்துக்குப் பொருந்தாத வகையில் சொத்துச் சேர்த்தது நிலக்கரி இறக்குமதி பேர ஊழல் ஆகிய வழக்குகளில் விசாரணைகளை நிறுத்த வேண்டும் என்று கோரி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார்.

சட்டத்துக்கு மதிப்பளிக்காமல், பழி வாங்கும் ஒரே நோக்குடன் தமிழக அரசு இந்த வழக்குகளை நடத்துவதாக மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ)

# ஈராக் மீதான தடையை தளர்த்த அமெரிக்க அரசு ஆலோசனை

ஈராக்குக்கு எதிரான பொருளாதாரத்தடைகளைத் தளர்த்தி நுகர்பொருள்களை இறக்குமதி செய்ய அனுமதி தருவது பற்றி ஆராய்வதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ளார்.

மேற்காசியச் சுற்றுப் பயணத்தை அடுத்தே பவல் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் புதிய அணுகுமுறையினால் ஈராக்கிய மக்களின் நிலைமை மேம்படும் என்றும் —

ஈராக்கின் எண்ணெய் ஏற்றுமதி, ஆயுத இறக்குமதி ஆகியவற்றுக்கான தடைகளுக்கு அரபு நாடுகளின் ஆதரவை தம்மால் பெற முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் ஈராக்கின் தென்பகுதியில் எண்ணெய்க் கிணறு தோண்டும் பணிக்காக இந்திய நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்திருப்பதாக ஈராக்கின் எண்ணெய்த்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

ஈராக் எண்ணெய் வளங்களை அபிவிருத்தி செய்ய ஐ.நா கட்டுப்பாடுகளை விதித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ 7-9)

# மாநகராட்சி அதிகாரிக்கு கடுங்காவல்

சென்னை, மார்ச்.8

வருமானத்துக்குஅதிகமாகச் சொத்துச் சேர்த்த குற்றத்துக்காக சென்னை மாநகராட்சியின் முன்னாள் நிர்வாக அதிகாரிக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1985–97 காலப் பகுதியில் இந்திய நிர்வாக சேவை தர அதிகாரியான, எச்.எம். பாண்டே கணக்கில் காட்டாமல் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமாக சொத்துக்களை குவித்ததற்காகவே தற்போது தண்டனை பெற்றுள்ளார்.


## புதிய கடைத் திறப்புவிழா

♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠♠

இன்று (07-03-2001) புதன்கிழமை மாலை 4 30 மணியளவில்
சுழிபுரம் வழக்கம்பரைப் பதியில் என்றும்
உங்கள் உள்ளங்களில் நிலைத்து நிற்கும்
வட்டுக்கோட்டை சச்சியா இரும்பக நிறுவனத்தினரின் ஆதரவுடன்

### "மனோ இரும்பகம்"

என்னும் ஸ்தாபனம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இத் திறப்பு விழா வைபவத்திற்கு அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனோ இரும்பகம்,
வழக்கம்பரை,
சுழிபுரம்.

தங்கள் வரவை விரும்பும்
திரு. பாலமனோகரன்

(சி/15534)


## தமிழக அரசியலில்...

# அ. தி. மு. க. கூட்டணியில் பா. ம. கவுக்கு 27 தொகுதிகள்

சென்னை, மார்ச் 7

எதிர்வரும் தமிழக சட்டசபைத் தேர்தல் குறித்து அ. தி. மு. கவுக்கும் பாட்டாளி மக்கள் கட்சிக்கும் இடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டுள்ளது

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பா. ம. க. தலைவர் ராமதாஸ் இதனைத் தெரிவித்தார்.

தமிழகத்தில் பா. ம. கவுக்கு 27 தொகுதிகளை அ. தி. மு. க. வழங்கியுள்ளதாக ராமதாஸ் அப்போது கூறினார்'

## பாண்டிச்சேரி தேர்தலில்

# அ.தி.மு.க. கூட்டணி வென்றால் சுழற்சி முறை அரசாம்

சென்னை, மார்ச் 7

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்டப் பேரவைத் தேர்தலில் அ. தி. மு. க. கூட்டணி வென்று ஆட்சியைக் கைப்பற்றினால், சுழற்சி முறையில் அரசமைக்க அ. தி. மு. கவும், பா. ம. கவும் உடன்பட்டுள்ளதாகப் பா.ம.க தலைவர் ராமதாஸ் தெரிவித்தார்.

இந்த உடன்பாட்டின் படி பாண்டிச்சேரியில் கூட்டணி வென்றால், பதவிக்காலமான 5 வருடங்களில் முதல் இரண்டரை வருடங்கள் பாட்டாளி மக்கள் கட்சியும் அடுத்த இரண்டரை வருடங்கள் அ. தி. மு. கவும் ஆட்சியமைக்கும் என்றும் அவர் கூறினார்.

சில வருடங்களின் முன்னர் உத்தரப் பிரதேசத்தில் பாரதீய ஜனதாவுடன் சமாஜ்வாடி கட்சி இவ்வாறு ஓர் உடன்பாடு கொண்டு தேர்தலில் போட்டியிட்டதும் —

உடன்பாட்டின்படி, முதல் பகுதியில் ஆட்சி அமைந்த சமாஜ்வாடி இரண்டாவது பகுதியில் பாரதிய ஜனதா ஆட்சியமைக்க வேண்டிய தருணத்தில் உடன்பாட்டை முறித்துக் கொண்டு பதவி விலக மறுத்துவிட்டதும் குறிப்பிடத்தக்கவை. (ஒ-ம-7)

# காங்கிரஸ், த. மா. காவுக்கு 45 இடங்கள் தரத் தயார்

## ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, மார்ச் 7

எதிர்வரும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழ் மாநிலக் காங்கிரஸுக்கும், காங்கிரஸுக்கும் சேர்த்து 45 இடங்களை வழங்க அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா முன்வந்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

தாம் வழங்கும் 45 தொகுதிகளை த. மா. காவும், காங்கிரஸும் எப்படி வேண்டுமானாலும் பகிர்ந்து கொள்ளலாமென்றும் ஜெயலலிதா கூறினார்.

அ.தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் சேர்ந்தால், பாண்டிச்சேரியில் தமது கட்சிக்கான இரண்டரை ஆண்டுகள் ஆட்சிக் காலத்தை அந்தக்கட்சிக்கு விட்டுக் கொடுக்கத் தயாராக உள்ளதாகவும் ஜெயலலிதா கூறினார்.

கூட்டணி தொடர்பாக த. மா. கா. காங்கிரஸ் கட்சிகளுடன் பிடிவாதப் போக்கை கடைப்பிடித்து வந்த ஜெயலலிதா திடீரென்று விட்டுக்கொடுக்க முன்வந்துள்ளது ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

# தி.மு.க. கூட்டணியில் சேர்ந்த 'விடுதலைச் சிறுத்தைகள்'

சென்னை, மார்ச் 7

தி. மு. க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் 'விடுதலைச் சிறுத்தைகள்' அமைப்பு சேர்ந்துவிட்டதாக முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்தார். தாழ்த்தப்பட்ட மக்களிடையே செல்வாக்குப்பெற்ற விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரான திருமாவளவன், கூட்டணியில் இணைவதற்கு நேற்று முன்தினம் முடிவு செய்தார்

தாழ்த்தப்பட்ட மக்களின் ஆதரவு பெற்ற மற்றொரு கட்சியான டாக்டர் கிருஷ்ணசாமி தலைமையிலான 'புதிய தமிழகம்' ஏற்கனவே தி. மு. க. கூட்டணியில் சேர்ந்துள்ளது.

தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே அதிகம் செல்வாக்குப் பெற்றுள்ள இரு கட்சிகளும் தற்போது தி. மு. க. கூட்டணியில் சேர்ந்துள்ளதால் அந்தக் கூட்டணிக்கு தாழ்த்தப்பட்டோரின் வாக்குகள் கிடைக்கும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

(ஒ-ம-7)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மருந்தக உரிமையாளரும்
சிறந்த சமூக சேவையாளருமாகிய

லயன் கே. எம். பத்மநாதன்
லயன் டாக்டர் கதிர்காமநாதன்
ஆகியோரின் அன்புத் தாயார்

## திருமதி முருகேசு நாகரத்தினம்

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்களுடன் எமது துயரத்தைப் பகிர்கின்றோம்.

கரசன் எலெக்ரிக்கல்ஸ்,
ஸ்தாபனத்தாரும்,
ஊழியர்களும்.

யாழ்ப்பாணம். [85031]



# சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம்
# கலந்துரையாடல்

## தொல்லியல் நோக்கில்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிநிலை

அண்மைக் காலத்தில் கிடைக்கப்பெற்ற சான்றுகள் தொடர்பான விளக்கம்.

விளக்கவுரை –

செ. கிருஷ்ணராஜா
(முதுநிலை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

இடம்:

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை,
திருநெல்வேலி.

காலம்: 09 - 03 - 2001 [வெள்ளி]
காலை 9-30 மணி

சமூக, விஞ்ஞான பண்பாட்டு அறிவியல் ஆர்வலர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம்,
யாழ்ப்பாணம். (85028)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா தெய்வானைப்பிள்ளை

வேலணை மேற்கு, 6 ஆம் வட்டாரத்தைச்சேர்ந்த திருமதி கந்தையா தெய்வானைப்பிள்ளை நேற்று (6-3-2001) செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பில் சிவப்பேறு அடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற வை. கந்தையாவின் மனைவியும். புனிதவதி, நாகேஸ்வரி பவநாதன், சரஸ்வதி, சதாசிவம் (ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி), பங்கயற் செல்வன் (வர்த்தகர், கொழும்பு), காலஞ்சென்ற இரஞ்சிதகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவராசா, செல்லையா, சிவசோதி, மூத்துலிங்கம், பானுமதி, சுசிலாதேவி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (7-3-2001) புதன்கிழமை புதுக்குடியிருப்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
க. சதாசிவம்
(மகன்)

சின்ன மணியகாரன் வீதி,
வட்டுக் கோட்டை. (85039)

## நாகரஞ்சினி செல்வசண்முகதாஸ்

(கனடா)

கோண்டாவில் குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரஞ்சினி செல்வசண்முகதாஸ் அவர்கள் நேற்று முன்தினம் (05- 03- 2001) திங்கட்கிழமை கனடாவில் அகால மரணமானார்.

இவர் நடராசா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்னமுத்து அவர்களின் அன்பு மகளும் செல்வசண்முகதாஸ் (கனடா) அவர்களின் அன்பு மனைவியும், நிலான் (கனடா), நிலானி (கனடா)யின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் நாகேஸ்வரன் (கனடா), நாகேந்திரன் (கனடா), நாகபூசணி (கோண்டாவில்), நாகராணி (சுவிஸ்), நாகநாதன் (கனடா), நாகராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் குலத்துங்கசேகரம் (கோண்டாவில்), சுகுமாரன் (சுவிஸ்), ஜெயந்தி (கனடா), சற்குணராணி (கனடா), குணாஜினி (கனடா), விசாலினி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் வித்யா, சுவானியா, இளங்கிரன், அச்சுதன், துஷாந்தி, திரிசோத் ஆகியோரின் சித்தியும் அருண், அஜந்தன், கிருத்திகா, சங்கீதா, அபிராம். திவ்யா, ஆகீசன், ஆருசன் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ந. சி. நடராசா (தந்தை)
கு. குலத்துங்கசேகரம் (மைத்துனர்)

குமரகோட்டம், கோண்டாவில். (85033)

# உலக சாரணர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம் மார்ச் 7

யாழ் மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் ஆதரவில் எதிர் வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் சங்க நிர்வாகக் குழுத் தலைவர் சி. வி. கே. சிவஞானம் தலைமையில் உலக சாரணர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனும் சிறப்பு விருந்தினராக யாழ். மத்திய கல்லூரி அதிபர் சி. இராசதுரையும் கலந்து கொள்வர்.

சகல சாரணர்களும் சாரணத் தலைவர்களும் சீருடையில் குறித்த தினத்தில் காலை 10 மணிக்கு யாழ் மத்திய கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (க-ரி)

# மாணவருக்கு! அழைப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 7

கைதடி, நாவற்குழி அ. த. க. பாடசாலையைச் சேர்ந்த ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற உள்ள மாணவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ள நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலைக்கு வருகைதருமாறு அதிபர் வி.ரி. திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார். [ம]

★ ★ ★

வேம்பொடுகேணி சி. சி. த. க. பாடசாலையில் இருந்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை விண்ணப்பத்தில் கையொப்பமிடுவதற்காக பின்வரும் திகதிகளில் தமது பெற்றோர்களுடன் சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.

இதன் படி வடமராட்சிப் பகுதியில் வசிக்கும் மேற்படி பாடசாலை மாணவர்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி ம மகா வித்தியாலயத்துக்கும்—

வலிகாமம் பகுதியில் தங்கியுள்ள மாணவர்களை எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்துக்கும் சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது (ஜ—7)

# மகளிர் தின கருத்தரங்கு

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி சுன்னாகம் றோ. டரக்ட் கழகமும் இராமநாதன் கல்லூரி இன்டரக்ட் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 3 30 மணிக்கு இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் ''பெண்கள் மீதான அடக்குமுறையும் அதனூடான உளவியல் தாக்கங்களும்'' என்னும் தலைப்பில் திருமதி சரோஜா சிவச்சந்திரன் கருத்துரை வழங்குவார். (க-3)

# விசர் நாயினால் 11 பேர் கடியுண்டனர்

மானிப்பாய்ப் பகுதியில் கடந்த வெள்ளியன்று விசர் நாய் ஒன்று 11 பேரைக் கடித்துள்ளது.

மானிப்பாய் உச்சிமோடை கிராமத்தைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான நாயே வீட்டில் உள்ள நால்வரையும் காலால் கீறி காயப்படுத்தியதுடன் அப்பகுதியைச் சேர்ந்த வேறு 11 பேரையும் கடித்துள்ளது

இவர்கள் அனைவரும் ஏ. ஆர். வி. தடுப்பூசி ஏற்றியுள்ளனர். (ஐ-10-90)

# வடமராட்சி கிழக்கு மக்களுக்கு இழப்பீடு படிவங்கள் விநியோகம்

வடமராட்சி கிழக்கு, மார்ச் 7

வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு, அவர்களது சொத்து இழப்பீடுகளை பதிவு செய்வதற்கான, படிவங்கள் வடமராட்சி கிழக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தினால் தும்பளையில் தற்போது இயங்கும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து கிராம சேவையாளர் பிரிவுகள் ரீதியாக காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை எதிர்வரும் வெள்ளி, சனி ஞாயிறு ஆகிய தினங்களில் வழங்கப்படவுள்ளன.

9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை— முள்ளியான், வெற்றிலைக்கேணி, நாகர் கோயில் மேற்கு, நாகர் கோயில் தெற்கு, அம்பன் கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு

10 ஆம் திகதி சனிக்கிழமை — நாகர் கோயில் கிழக்கு, செம்பியன்பற்று தெற்கு, உடுத்துறை போக்கறுப்பு கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு—

11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை —ஆழியவளை, செம்பியன் பற்று வடக்கு, மருதங்கேணி, வத்திராயன், சுண்டிக்குளம் கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு—

இழப்பீட்டுப் படிவங்களை பெறவருபவர்கள் இடம்பெயர்ந்த நிவாரண அட்டை, தேசிய அடையாள அட்டை. ஆகியவற்றினை கொண்டு வரும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

பூர்த்தி செய்த படிவங்களை எதிர்வரும் 17 ஆம் திகதி மீளவும் வடமராட்சி கிழக்கு இடம் பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்திடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

(க-182)

# மரண அறிவித்தல்கள்

## தம்பு கனகசபை

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி வீதியைச் சேர்ந்த தம்பு கனகசபை நேற்று (6-3-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும் இராசேந்திரம், திருமதி மகேந்திரராணி. குணசேகரம், வசந்தகுமாரி, வசந்தகுமாரன் ஆகியோரின் அன்புத் தகப்பனரும், மனோரஞ்சிதம், சோதிலிங்கம், தமயந்தி, அருட்செல்வம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்லையா, DR. இராசையா (சுதுமலை), திருநாவுக்கரசு. திருமதி நகுலேஸ்வரி விஜயரத்தினம், மாணிக்கவாசகர் காலஞ்சென்ற திருமதி அன்னம்மா முத்தையாவின், மூத்த சகோதரனும், விஜயரத்தினத்தின் (கொழும்பு) மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (7—3—2001) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தகவல்:–
தம்பு திருநாவுக்கரசு
(சகோதரன்)

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு. (85035)

## செல்லையா சுப்பிரமணியம்

[ஓய்வுபெற்ற உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்கள ஊழியர்]

புத்தூர் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சுப்பிரமணியம் 5-3-2001 இல் கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் தவமலரின் அன்புக் கணவரும் வசந்ததேவன், சுதாஜினி, செல்வசுகிந்தன் [பிரான்ஸ்], சுபாஜினி [இந்தியா] ஆகியோரின் அன்புத் தந்தையும் நவேந்திரராசா [கொழும்பு], சிவசரணம் [பிரான்ஸ்], அணித்தா [இந்தியா] ஆகியோரின் மாமனாரும் தேனுயன், அஜிந்தா, ஜேனுசா, மாறுயன் [இந்தியா] ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10-03-2001 சனிக்கிழமை நடைபெற்று தகனக்கிரியைகள் கொழும்பு கனத்தை மயானத்தில் இடம்பெறும்.

தகவல்:
செ. அருளானந்தம்
[சகோதரர்]

[85047]

## பாவிலுப்பிள்ளை ஜோசப் பிரான்சிஸ்

(ஓய்வுபெற்ற அதிபர்)

இராஜேந்திரா வீதியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலுப்பிள்ளை ஜோசப் பிரான்சிஸ் (ஓய்வுபெற்ற அதிபர், நுவரெலியா பத்தனை தமிழ் வித்தியாலயம்) நேற்று 06-03-2001 டெறிக்கிளையர் எஸ்டேட், கொட்டகலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி பூமணி ஜோசப் பிரான்சிஸின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா / ஆனைப்பந்தி மெதடிஸ்மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை) அன்புக் கணவரும் திருமதி றெஜி பிரான்ஸிஸ் ரட்ணம் (ஆசிரியை), றெக்ஸ் சத்தியராஜ் (ஜேர்மனி) திருமதி றஜனி பிளசம் கிளமன்ட் (ஆசிரியை), றோய் நேசராஜ் (ஆசிரியர்), செல்வி றாஜேஜாய் (ஆசிரியை) றெஜினோல்ட் இன்பராஜ் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நீர்கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
பிள்ளைகள்

12/1, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (85045)




யாழ்ப்பாணம் வந்துள்ள அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் நேற்று யாழ்.செயலகத்துக்கு விஜயம் செய்த போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. தூதர் வில்ஸ் மங்கள விளக்கேற்றுவதையும், அமெரிக்கத்தூதரக பாதுகாப்பு உயர் அதிகாரி அல்பேட் டோபியன்ஸிக்கு மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் மாலை அணிவிப்பதையும் மேலே உள்ள இரு படங்களிலும் காணலாம்.




செயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் க.சண்முகநாதனுடன் தூதர் வில்ஸ் அமர்ந்திருந்து திணைக்களத் தலைவர்களுடன் உரையாற்றுவதை மேலே மேலே உள்ள படத்திலும்-

அங்கு சமுகமளித்திருந்த வலி.வடக்கு பிரதேச செயலாளர் பத்தினியம்மா திலகநாயகம் போல் மற்றும் அமெரிக்கத் தூதரக அரசியற்றுறை உதவி உத்தியோகத்தர் பத்மினி இராஜதுரை, செயலக அதிகாரி எஸ்.வீரகத்திப்பிள்ளை ஆகியோரை கீழே உள்ள படத்திலும காணலாம்.


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## உயர்திரு. கணபதிப்பிள்ளை சண்முகநாதன்

பண்பில் உயர்ந்தவரும், பல்லாண்டு காலமாக மக்கள் பணியும், சமயப் பணியும் தனது உயிர்மூச்சு எனக் கருதிச் சேவையாற்றி இளைப்பாறிய புலோலி மத்தி கிராம அலுவலரும், ஆத்தியடிப்பிள்ளையார் ஆலய முகாமையாளரும், ஆத்தியடி சனசமூக நிலைய சைவமன்ற முன்பள்ளிக் காப்பாளரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளை உப தலைவரும், பருத்தித்துறை மத்திய மருந்தக நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளரும் யா/வேலாயுதம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கச் செயலாளரும், தமிழ், சிங்கள, ஆங்கில மொழிபெயர்ப்பாளரும் வடமராட்சியின் புகழ்பூத்த சிங்கள ஆசானும், பரம்பரை வைத்தியரும் ஆகிய

**உயர்திரு. கணபதிப்பிள்ளை சண்முகநாதன் அவர்கள்**

மேன்மேலும் தமது பணிகளை முன்னெடுத்துச் செல்ல எல்லாம் வல்ல ஆத்தியடிப் பிள்ளையாரின் கிருபையால் சகல சௌபாக்கியங்களும் பெற்று சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

யோகாஸ் கிறீம் கவுஸ்,
கந்த முருகேசனார் சிலையடி,
மந்திகை, பருத்தித்துறை.

(C/15595)


### கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்7

மீசாலை கைத்தொழில் வணிகர் மன்றத்தின் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கரவெட்டி கிழக்கில் உள்ள கிழவி தோட்டம் பிள்ளையார் கோயிலில் நடைபெறவுள்ளது. (ஐ-10)


நாளை ஆரம்பம்!
A/L 2001
வணிகக்கல்வி
வினாவிடை வகுப்பு
மாலை 5 மணி
திரு.யசோ
BEACON
வெலிங்டன் சந்தி அருகில்
(85032)

விற்பனைக்கு!
9500 VIDEO CAMARA
MS - 20 MIX
(Panasonic)
தொடர்பு:
ஷண் றெக்கோடிங் ஸ்பொட்
பெரியகடை, யாழ்ப்பாணம்.
(85036)

# பக்திப்பாடல் CD வெளியீடுகள் (சிவன், அம்மன், முருகன்)

## நவக்கிரகப் பாடல்கள்



01. தங்கமயில் முருகன் (T.M.சௌந்தரராஜன்)
02. நவக்கிரகப் பாடல்கள் (மோகன், வைத்யா)
03. T.M.சௌந்தரராஜனின் பக்திப்பாடல்கள் (நடராஜனின் தரிசனமே)
04. ஆதித்திய கிருதயம், நவக்கிரக அஸ்டோத்திரம், கிரகசாந்தி. (சமஸ்கிருதம். T.S.அஸ்வினிசாஸ்திரி, T.S.ரோகினிசாஸ்திரி, பரத்வாஜா சாஸ்திரி, சங்கரசாஸ்திரி)



05. காவடியாட்டம் (சக்திதாசன்)
06. தீபஜோதி துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதி (மகாநதி ஷோபனா)
07. ஆடித்தேர் (மகாநதி ஷோபனா)
08. பரம்பொருளே ஓம் நமசிவாய (Dr.K.J.ஜேசுதாஸ்)
09. மஞ்சள் குங்குமம் (ஸ்ரீ துர்க்கை பாடல்கள் வீரமணிதாசன்)



10. பழம்நீஅப்பா (ஸ்ரீஹரி)
11. மதுரை அரசாளும் மீனாட்சி (Dr.சீர்காழி சிவசிதம்பரம்)
12. ஸ்ரீ கேதார கௌரி நோன்பு பூஜை (அஸ்வினி சாஸ்திரிகள, ரோகினி சாஸ்திரி)
13. ஓம் நமசிவாய (ஜபம்:சமஸ்கிருதம் S.P.பாலசுப்பிரமணியம்)



14. சக்தி பராசக்தி (T.M.சௌந்தரராஜன்)
15. வருவாய் மாரியம்மா (வீரமணிதாசன், மகாநதி ஷோபனா)
16. அருள்முருகா (அனுராதா ஸ்ரீராம்)
17. ஜெயஜெய சங்கரி (உன்னி கிருஷ்ணன்)

இவை அனைத்தும் சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட - வேறு எங்கும் கிடைக்காத - எம்மிடம் மாத்திரமே உள்ள இந்த ஓடியோ CDக்களைச் சிறந்த முறையில் கசற்றில் பதிவு செய்து வர்ண முகப்புக் கவருடன் பெற்றுக் கொள்ள



"கப்பலோ வீடியோ, ஓடியோ சென்றர்"

149, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



(C/15590*)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி புஷ்பம் இம்மனுவேல்

இல.57, ஸ்ரேசன்சந்தியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஷ்பம் இமமனுவேல் 05-03-2001 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற G.S.இம்மனுவேலின் அன்பு மனைவியும் அன்ரன்(லண்டன்), தேவா(லண்டன்), காந்தா(ஆஸ்திரேலியா), ராஜி (கனடா), ரேவதி(கனடா), சூட்டி(கனடா), றாஜா(கனடா), வினோ(கனடா), ஆகியோரின் பாசமிகு தாயாரும், அலோய் ரெட்ணசிங்கம்(கனடா), றீற்றா சுகிர்தம் யோன்(கொழும்பு), யூலியானா மனுவல்பிள்ளை(கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

*கனடா முகவரி:*
47, HAWKSHEAD CRESENT,
SCARBOROUGH,
ONTARIO MIW 2Z4,
CANADA.
T.P.NO: 4986093

தகவல்:
விஜயா யோண்,
148/12 ஸ்ரேசன் றோட்,
யாழ்ப்பாணம். (85037)

## திருமதி கோபாலரத்தினம் சசிகலா

சிறாம்பியடி, யாழ்வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி கோபாலரத்தினம் சசிகலா அவர்கள் நேற்று முன்தினம் (05-03-2001) திங்கட்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ் சென்ற மயில்வாகனம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாவட்டக்காணி உத்தியோகத்தர் மயில் அமிர்தலிங்கத்தின் அன்புச் சகோதரியும், முன்னாள் குடியேற்ற உத்தியோகத்தர் த.கோபாலரத்தினத்தின் அன்பு மனைவியும் திருமதி திருக்குமார் சியாமளா (ஜேர்மனி), சித்திரகுமாரன் (யாழ்.பிரதேசசெயலகம்), இலங்கேசன் (பொறியியல்பீடம், இறுதியாண்டு, பேராதனைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவராஜா திருக்குமாரின் (ஜேர்மனி) அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*49A, சிறாம்பியடி,*
*யாழ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
கோ.சித்திரகுமாரன் (முகுந்தன்)
(மகன்)
(85044)

## கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

தையிட்டியைப் பிறப்பிடமாகவும், நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை அவர்கள் நேற்று (06-03-2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும், தெய்வேந்திரம் (ரவி மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்), புவனேந்திரன், மகேந்திரன் (கனடா), இராஜேந்திரன் (கனடா), திருமதி சுசீலா சுந்தரேசன், திருமதி லலிதா மகேந்திரன், திருமதி வனிதா தனபாலசிங்கம், ரஜிதா ஸ்ரீதரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுந்தரேசன் (உதவி ஆணையாளர், கமநல சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்), மகேந்திரன் (கனடா), தனபாலசிங்கம் (ஆசிரியர், கொழும்பு), ஸ்ரீதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷ்ணபிள்ளை காலஞ்சென்ற சேதுப்பிள்ளை மற்றும் சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*1010/12C, நாச்சிமார் கோயிலடி,*
*யாழ்ப்பாணம்.*
(C/15593)

தகவல்:
க.சுந்தரேசன்
(மருமகன்)

## திருமதி மாணிக்கம் சீதேவி

மாணிக்கம் சீதேவி நேற்று (06-03-2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மாணிக்கத்தின் அன்பு மனைவியும், கமலாதேவி, ஸ்ரீதரன், பாஸ்கரன், யசோதேவி (பிரான்ஸ்), சுவேந்திராதேவி (யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்) ஆகியோரின் தாயாரும், கிங்ஸ்லி, ராகினி, நிலா (பிரான்ஸ்), மகேந்திரராசா (யாழ்.வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும், சிந்துஜா, அனுசியா, நவீனா, மகிலன், வினோஜன், றோசான் (பிரான்ஸ்), ஜனகன், ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், உதயகுமார், சாந்தநாயகி, உமாவதி ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சரஸ்வதி வித்தியாலய வீதி, கரவெட்டி மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (07-03-2001) நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சோனப்பு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*யா/சரஸ்வதி வித்தியாலய வீதி,*
*கரவெட்டி.*
(C/15592)

தகவல்:
நா.மகேந்திரராசா
(மருமகன்)

# சமாதானம் மலர்ந்தால் சர்வதேச உதவிகள் கிட்டும்

## அமெரிக்கத் தூதர் தெரிவிப்பு

இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கக் கூடிய சூழ் நிலை உருவாகி வருகின்றது. அத்தகைய பேச்சுக்கள் இடம்பெற்று சுமுக நிலை ஏற்பட்டால் அமெரிக்கா மட்டும் அல்லாமல் முழு உலகமுமே உதவிகளை வழங்கும்.

இப்படிக் கூறினார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ்.

யாழ்.ஆஸ்பத்திரிக்கு 4 கோடி ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களைக் கையளிக்கும் வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் மனிதாபிமான உதவித் திட்டத்துக்கு அமைய இலங்கையில் ஒரு வைத்தியசாலைக்கு முதற்தடவையாக இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த வைத்தியசாலையில் நிலவும் வைத்தியர் தட்டுப்பாடு, உபகரணப் பற்றாக்குறை ஆகியன தொடர்பாக அறிந்துள்ளோம். இராணுவ ஆஸ்பத்திரி ஒன்றுக்கு வழங்கப்படும் உபகரணங்களையே இன்று வழங்கியுள்ளோம்.

இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த முயற்சி வெற்றி பெற்றால் இந்த ஆஸ்பத்திரிக்குப் பெரியளவில் உதவிகளை வழங்குவோம்.

அத்துடன் இங்கு சுமுகமான சூழ்நிலை உருவானால் அமெரிக்கா மட்டுமல்ல சர்வதேச சமூகமும் உதவிகளை வழங்கும்.

விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சமாக அறிவித்துள்ள யுத்தநிறுத்தம் காரணமாக கடந்த இரு மாதங்களாக அமைதி நிலவுகிறது. கொழும்பில் அச்சமின்றி நடமாட முடிகிறது. இந்த நிலை தொடரவேண்டும் -என்று தூதர் வில்ஸ் தெரிவித்தார்.(ஐ-3-7)

### நேரடிப் பேச்சுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொல்ஹெய்ம் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை -

கொழும்பில் அரசுத்தரப்புடன் நேற்று முன்தினம் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை நேற்று லண்டனில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்கு தூதர் எரிக்சொல்ஹெய்ம் விளக்கிக்கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருதரப்புகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் வாய்ப்புத் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் தான் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை அவர் பாலசிங்கத்துக்கு எடுத்துக் கூறியதாக லண்டன் தகவல்கள் தெரிவித்தன. (ஐ-3-7)

### நெதர்லாந்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸும், நீர்ப்பாசன நீர்வள முகாமைத்துவ அமைச்சர் சரத் அமுனுகமவும் பங்குபற்றுவர் என்றும் -

விடுதலைப் புலிகள் தரப்பில் அந்த அமைப்பின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்துடன் வேறு ஒரு பிரதிநிதியும் கலந்துகொள்வார் எனவும் - தெரிவிக்கப்படுகிறது.

பேச்சுக்கள் பெரும்பாலும் சித்திரைப் புத்தாண்டுக்கு முந்திய தினங்களில் ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
10-03-2001
BATCH I 10.00 மணி
DESKTOP PUBLISHING USING PAGEMAKER COREL DRAW
OBJECT ORIENTED PROGRAMMING USING JAVA
COMPUTER HANDLING USING WORD, EXCEL MULTIMEDIA WINDOWS
DBMS USING MS ACCESS VISUAL BASIC
ACCOUNTING APPLICATION USING MS EXCEL MS ACCESS
JAVA APPLET & HTML
2674
STP
54A, Palaly Road
Kantharmadam
COMPUTER WORLD (PVT) LIMITED

மீண்டும் கைலாசபதி கலையரங்கில்
கைகொடுத்தல் நிதி
லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை மற்றும்
சிற்றி கொமினிகேசன் & கொம்பியூட்டர் சேவிஸ்
அனுசரனையில்
07-03-2001
புதன் கிழமை
மாலை 3.30 (பு.நேரம்)
தே.தேவானந்தின்..
உயிர் விசை
(நாடக ஆற்றுகை)
முகாமைத்துவ கற்கைகள்,வணிக பீடமாணவர் ஒன்றியம்.
எங்கள் சேவை உங்கள் தேவைக்கே
லெயலரஸ்
195 main street,
4th cross street junction Jaffna.

## ஆசிரியர் சங்க விசேட கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்7

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல கிளைகளையும் சேர்ந்த தலைவர், செயலாளர், பொருளாளர்களுக்கான விசேட கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் கலந்துகொள்வார்.

இதேவேளை -

பொதுச்செயலாளரைச் சந்திக்க விரும்பும் அதிபர், ஆசிரியர்கள் எதிர்வரும் 10 ஆம், 11 ஆம் திகதிக ளில் காலை நல்லூரில் உள்ள சங்கத்தின் தலைமை அலுவலகத்துக்குச் சமுகமளிக்கலாம் என்று சங்கத்தின் சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

(ஐ-7)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு,மார்ச்7

மட்டக்களப்பு - களுவாங்கேணிப் பகுதியில் இருந்து கடந்த 15 தினங்களுக்கு முன்னர் காணாமல் போன ஒருவர் நேற்று மாலை அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இளங்குடும்பஸ்தர் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

(ஐ-7)

## கண்டியில் பிக்குகள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,மார்ச்7

ஆப்கானிஸ்தானில் புராதன பௌத்த சின்னங்கள் அழிக்கப்பட்டுள்ளதைக் கண்டித்து கண்டியில் நேற்று 300 க்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

அஸ்கிரிய, மல்வத்தை ஆகிய பீடங்களின் பீடாதிபதிகளின் தலைமையில் இடம்பெற்ற இந்த ஊர்வலம் கண்டி நகர சபையில் ஆரம்பமாகி நகர வீதிகள் ஊடாகச் சென்று மீண்டும் நகர சபையை வந்தடைந்தது.

(ஐ-3)

## குடும்பஸ்தர் குத்திக் கொலை

யாழ்ப்பாணம்,மார்ச்7

கள்ளுத் தவறணையில் வைத்து கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்தார் எனத் தெரிவித்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

நாயன்மார்கட்டுப்பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சுப்பிரமணியம் வீதி, அரியாலையைச் சேர்ந்தவரும் தற்போது இடம்பெயர்ந்து நாயன்மார்கட்டுப் பகுதியில் வசித்து வந்தவருமான ஆறு பிள்ளைகளின் தந்தையான சேனாதிராஜா சந்திரமோகன் (வயது 35) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது உறவினர் ஒருவரே இவரைக் கத்தியால் குத்தியதாகக் கூறப்பட்டது.

(ஐ-7)

எமது பிரமிட் அன்
FIVE STAR
வீடியோ CD வெளியீடுகள்
லாட்டி
கண்ணுக்கு கண்ணாக
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/15594)

ஐடியல் அக்கடமி
A/L2002 மாணவர்களுக்கு!
குறியீட்டு அளவையியல்
ஆரம்பம்:- 10/03/2001
நேரம் :- 8.30 (ப.நே.)
* புதிய மாணவர்களும் அனுமதியை பெற்றுக்கொள்ளலாம்
NOTE:- 5000க்கு மேற்பட்ட பயிற்சிகள் மேலதிக வகுப்புக்களில் செய்யப்படும
(C/15561)
ஆசிரியர்:-
E.S.பவன்

## நேற்றுக் காலை குடாக்கடலில்

# மீனவரின் உபகரணங்கள் கடற்படையினரால் பறிமுதல்!

குருநகர்,மார்ச்7

யாழ்.கடனீரேரிப் பகுதியில் நேற்றுக் காலை மீன்பிடித்துக் கொண்டிருந்த குருநகர்ப் பகுதி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் அங்குவந்த கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக மீனவர்கள் முறையிட்டுள்ளனர்.

ஐந்து வள்ளங்கள், வலைகள் மற்றும் 19 பேரின் மீன்பிடி அனுமதிப் பத்திரங்கள் என்பனவே பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அவற்றைப் பறிமுதல் செய்த கடற்படையினர், நாளைமறுதினம் யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு வருமாறு தமக்கு உத்தரவிட்டுச் சென்றதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-51-7)

# மலையகத் தொழிலாளர்களின் சத்தியாக்கிரகத்தில் டக்ளஸ்

கொழும்பு,மார்ச்7

தோட்டத் தொழிலாளர்களுக்கு 400 ரூபா சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்று கோரி ஹட்டனில் இடம்பெற்றுவரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா நேற்றுக் கலந்து கொண்டார்.

ஹட்டனில் தொடர்ந்து நடைபெறுவரும் சத்தியாக்கிரகத்தில் 14 ஆம் நாளான நேற்று பங்குபற்றிய டக்ளஸ் தேவானந்தா தொழிலாளர்களின் போராட்டத்துக்கு தனது பூரண ஆதரவை வழங்குவதாக உறுதியளித்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்தாலோசனை நடத்த விருப்பதாகவும் அவர் அங்கு தெரிவித்தார்.

நவசமசமாஜக்கட்சிப் பிரமுகர் வாசுதேவ நாணயக்கார ,ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸநாயக்க ஆகியோரும் நேற்று சத்தியாக்கிரகத்தில் பங்குபற்றினர். (ஐ-3)

### ஆஸ்பத்திரியின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வைபவத்தில் உரையாற்றிய யாழ்.போதனா வைத்தியசாலை சதத்திரசிகிச்சை நிபுணர் அ.தயாளன் கூறியதாவது:-

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் ஆஸ்பத்திரிச் சுற்றாடல் பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்ட போது ஆஸ்பத்திரி சுற்றாடலில் எவருமே ஆயுதத்துடன் நடமாடமுடியாதவாறு நடைமுறைகள் இருந்தன.

தற்பொழுது கட்டுப்பாடு எதுவும் இன்றி ஆஸ்பத்திரி சுற்றாடலில் ஆயுதம் ஏந்தியவர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இதனால் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் மற்றும் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்கள் மற்றும் டாக்டர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் அனைவரினதும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் டாக்டர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் நீண்டகாலம் நிரப்பப்படாமல் உள்ளன.

இரு வைத்திய நிபுணர்கள் மட்டுமே இங்கு கடமையாற்றுகின்றார்கள்.

இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர்கள் தமது சொந்தத் தேவைகளுக்காக வெளிமாவட்டங்களுக்குச் சென்று வருவதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

நோயாளர்கள் கூடத் தமது மருத்துவத் தேவைகளுக்காக கொழும்பு போன்ற வெளி மாவட்டங்களுக்குச் சென்று வருவதற்குப் பாதுகாப்பு அனுமதியைப் பெறவேண்டிய நிலையிலுள்ளனர்.

இத்தகைய காரணங்களினால் யாழ்ப்பாண மக்கள் குழப்பமடைந்த நிலையில் காணப்படுகின்றனர் - என்றார்.

#### பணிப்பாளர் உரை

யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி என். கனகரட்ணம் தனது தலைமை உரையில் கூறியதாவது:-

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மருந்துப் பொருள்களையோ மருத்துவ உபகரணங்களையோ கொண்டுவருவதற்குக் கூடப் பாதுகாப்பு அனுமதியைப் பெறவேண்டிய நிலையில் உள்ளோம்.

வவுனியா, மட்டக்களப்பு போன்ற இடங்களுக்கு இத்தகைய கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை.

ஆயுத மோதல்களின் போது கொல்லப்படுபவர்களில் பெருந்தொகையான சடலங்கள் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்படுகின்றன.

பெரும் எண்ணிக்கையான சடலங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கான வசதிகளோ அன்றி பிரேதப் பரிசோதனை செய்வதற்கான வசதிகளோ எமது வைத்தியசாலையில் இல்லை.

யுத்த முனைகளில் இருந்து பழுதடைந்த நிலையிலுள்ள சடலங்கள் எடுத்துவரப்பட்டு ஒப்படைக்கப்படுவதால் யாழ்.வைத்தியசாலைச் சுற்றாடலில் துர்நாற்றம் வீசுகின்றது - என்று தெரிவித்தார். (ஐ-5-6-139)

சுனில் ஆர்ட்ஸ்
22-2-2001 வரை எம்மிடம் ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
12-3-2001 அன்று கொழும்புக்கு படச்சுருள்கள் அனுப்பி வைக்கப்படும்.
விற்பனைக்கு
Pentium iii ற்கான Scanners
Creative, Yamaha CD Writers
T.V.Cards
Sony CD Roms
Dust Covers, Computer cleaner tin spreyers
(England)
Head phone with mic
Blank C.D.S, WR.C.D
NOTE:
1. (எம்மிடம் M.P.3 தமிழ், ஆங்கிலம், ஹிந்தி புதிய பாடல் C.D க்கள் விற்பனைக்கு உண்டு.)
2. (புதிய பழைய பாடல்கள் C.D இல் இருந்து C.D க்கு பதிவு செய்து தரப்படும். ஓடியோ கசட்டில் இருந்தும் C.Dபதிவு செய்துதரப்படும்.)
(C/15591)
சுனில் ஆர்ட்ஸ்
277, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07. 03. 2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.